# களத்தில்

*சிங்களப் பயங்கர வாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.*

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (17.12. 1997 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் [illegible] நாள் [illegible] அன்பளிப்பு: 60 p


# ஒரே தடவையில் பெருந்தொகை விசேட கொமாண்டோக்கள் பலி

[illegible]ர் - மன்னாங்குளம் பகுதி [illegible]லிருந்து கனகராயன்குளம் [illegible]க்கித் தரைநகர முயன்ற 'ஜெயசிக்குறுய்' படையணி முற்றாக செயலிழக்கப்பட்டது.

புதூர் - மன்னாங்குளம் பகுதிகளில் இருந்து கனகராயன்குளம் நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்காவின் இரு அணிகளைத் தமக்கு வசதியான இடம்வரை வர அனுமதித்து சுற்றிவளைத்த விடுதலைப் புலிகளின் சிறப்புப் படையணியினர், சிறிலங்காப் படையினரில் 24 பேர் மட்டுமே தப்பிச் செல்லக்கூடிய நிலையை ஏற்படுத்தினர். தாக்குதலின் உக்கிரகத்தை இதிலிருந்தே ஊகிக்க கூடியதாக இருக்கிறது.

300க்கு மேற்பட்ட விசேட இராணுவக் கொமாண்டோக்கள் கொல்லப்பட்டுள்ள இந்த வெற்றிகரத் தாக்குதலில், சர்வதேச செய்தி நிறுவனங்களின் செய்திகளின்படி, மேலும் நானூறு படையினர்வரை காயமுற்று மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட ஒரு தாக்குதலில் பெருந்தொகையான விசேட கொமாண்டோக்கள் கொல்லப்பட்டமை இதுவே முதற் தடவையாகும். கொல்லப்பட்ட படையினரின் சடலங்களில் 133 சடலங்கள் விடுதலைப் புலிகளினால்


தொடர்ச்சி 2 ம் பக்கம்...


## தடுப்புக்காவல் தமிழ் இளைஞர்கள் சிறைக்குள் இனப்படுகொலை

**1983** வெலிக்கடைச் சிறை இனப்படுகொலைப் பாணியில் மீண்டும் களுத்துறைச் சிறையில் சிங்கள கைதிக் காடையரினால் சிறைக் காவலர்களின் முன்னிலையில் தமிழ் அரசியல் கைதிகள் இருந்த மரக்கதவை உடைத்தெறிந்து உள்ளே புகுந்து அங்குள்ள தமிழ் இளைஞர்களை ஆயுதங்களால் தாக்கி படுகொலை புரிந்துள்ளனர். இரண்டு தமிழ் இளைஞரும் ஒரு முஸ்லிம் இளைஞரும் கொலை செய்யப்பட்டதுடன் மேலும் 17 தமிழர்கள் காயமுற்ற இந்தக் கோரச் சம்பவம் இலங்கைத் தீவின் மற்றொரு கறை படிந்த அத்தியாயமாக வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இறந்தவர்களின் சடலங்களை உறவினர்கள் தமது சொந்த ஊருக்குக் கொண்டு செல்லாதவாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது. மேலும், இச் சர்வதேச சட்டங்களுக்கு மட்டுமல்ல, மனித உரிமைகள் சாசனத்திற்கு எதிரான திகிலூட்டும் இனவெறித்தனத்தினால்


தொடர்ச்சி 2 ம் பக்கம்.....


## அவுஸ்திரேலியா வாழ் தமிழ்ப் பேராசிரியருக்கு தமிழீழத் தேசத்து அதிஉயர் விருது

**த**மிழீழத்திலிருந்து புலம்பெயர்ந்து வாழும் பேராசிரியர் எலியேசர் அவர்கட்கு 1997ஆம் ஆண்டு "மாமனிதர்" விருது தமிழீழத் தேசத் தலைவர் பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. தமிழீழத் தேசத்தின் அதிஉயர் விருதான மாமனிதர் விருது, தமிழீழ மண்ணினதும் மக்களினதும் மேன்மைக்காக உழைக்கும் மக்களில் இருந்து அவர்கள் ஆற்றிவரும் இலக்கியம், மருத்துவம், விஞ்ஞானம் போன்ற பத்துத்துறைகள் சார்பில் ஒவ்வொருவரை கௌரவித்து தலா ஒன்று வீதம் ஆண்டுதோறும் வழங்கப்படும் இவ்விருது, ஒரு பவுண் எடைகொண்ட புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட தங்கப்பதக்கமாகும். இந்த பெறுதற்கரிய தேசவிருது வழங்கப்படுதலின் நோக்கம், தத்தம் அறிவை, ஆற்றலை மக்களுக்காகவும் மண்ணுக்காவும் பயன்படுத்தும் திறமையாளர்களை உலகறியச் செய்வதும் அவர்தம் தொண்டு மேலும் சிறப்புறச் செய்வதுமேயாகும்.

தமிழீழத்திற்கு வெளியே வாழும் தமிழீழ மக்களில் முதன்முதலாக இந்த அதியுயர் தேசவிருதைப் பெறுபவராக அவுஸ்திரேலியாவில் வாழும் பெரும் கல்விமான் பேராசிரியர் எலியேசர் திகழ்கிறார். தமிழீழ தேசத் தலைவர் சார்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அவுஸ்திரேலியப் பிரதிநிதி ஜெயக்குமார் மெல்பேர்னில் 06.12.97 இல் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சியில் பேராசிரியர் எலியேசருக்கு இவ் விருதை அணிவித்தார். இது



குறித்து தேசியத் தலைவர் அவர்கள், திரு. எலியேசர் அவர்களுக்கு அனுப்பிவைத்த உத்தியோகபூர்வக் கடிதமும், விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகம், இலண்டன் ஐக்கிய தமிழர் அமைப்பு ஆகியன அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்திகளும் உள்ளே பிரசுரிக்கப்பட்டுள்ளன.



**சங்கத்தில் தமிழ் வளர்த்த இனம்**
**சிங்களப்படை நகர்த்தும்**
**சூழ்ச்சிகளில் சிக்காது**
**தர்மம், நீதி என்றும் தோற்காது**
**பங்கம் வருங்கால் பாய்புலியாகும்.**
**தீ உமிழும் யாளிகளும்**
**இவர்தம் கைப்பிடிக்குள் சிக்கிவிடும்**
**நாளும் எழுதுகின்ற வரலாறு**
**நானிலமே கூறும் !**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# மட்டக்களப்பில் அமெரிக்க அரசின் செயற்பாட்டுக்கு எதிராக மக்கள் பேரணி

## அமெரிக்க ஜனாதிபதிக்கு மகஜர்

அமெரிக்க அரசின் உள்நாட்டுக்கான பயங்கரவாதப் பட்டியலில், விடுதலைப் புலிகள் இயக்கத்தினைச் சேர்த்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக ஆயிரக்கணக்கான மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்ட பிரமாண்டமான பேரணி ஒன்று, மட்டக்களப்பு வாகரைப் பகுதிகளில் இடம் பெற்றுள்ளது. ஊர்வலத்தில் பங்குபற்றிய மக்கள், பேச்சு வார்த்தையின் தேவையினை வலியுறுத்துவதற்குப் பதிலாக பக்கச்சார்பான முறையில் விடுதலைப் புலிகளின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதை மாற்றிக் கொள்ள வேண்டுமென வற்புறுத்திக் கேட்டுக் கொண்டனர். இதனை விளக்கும் சுலோக அட்டைகள் மக்களால் எடுத்துச் செல்லப்பட்டன.

ஊர்வலத்தின் முடிவில் யதார்த்த நிலைகளை விளக்கும் மகஜர் ஒன்று பிராந்திய செயலாளர் எஸ். முரளீதரன் அவர்களுக்கு மக்களால் கொடுக்கப்பட்டது.

மேலும் அமெரிக்க ஜனாதிபதி திரு. பில் கிளின்டன் அவர்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் திரு. கோவ்பி அன்னன் அவர்களுக்கும் மக்களால் அனுப்பி வைக்கப்பட்டன.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜரில், தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடும் தமிழ் மக்களின் அமைப்பை சட்ட விரோதமானது எனப் பிரகடனப்படுத்துவதற்கு எந்த விதமான நியாயமும் கிடையாது எனச் சுட்டிக் காட்டியுள்ளனர். அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கர வாதப் பட்டியலில் இருந்து நீக்கி தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரிக்க வேண்டுமென அம் மகஜரில் தமிழ் மக்கள் வலியுறுத்திக் கேட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் கோவ்பி அன்னனுக்கு அனுப்பி வைத்த மகஜரில், வடக்கு – கிழக்கில் நடைபெறும் கொடுமையான போரை நிறுத்த உதவியும் விடுதலைப் புலிகள் மேல் முன்நிபந்தனைகளை திணிக்காத மூன்றாம் தரப்பு மத்தியத்தத்துடனான பேச்சு வார்த்தை ஊடாக அமைதித் தீர்வு ஏற்பட உதவுமாறும் மக்கள் கேட்டுள்ளனர். அத்துடன், இம் மகஜரில் திரு. அன்னன் அவர்கள் தமிழ் மக்கள் சட்டபூர்வமான ஜனநாயக உரிமைகளை அனுபவிக்க உதவ வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

4 பக்கங்களைக் கொண்ட இந்த மகஜரில் தமிழ் மக்கள் சிறிலங்கா அரசால் அனுபவிக்கும் கொடுமைகளும் நரகலோக வாழ்வும் சான்றுகளுடன் எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

# தடுப்புக்காவல் தமிழ் இளைஞர்கள்.....

தமது உயிர்களுக்கும் உத்தரவாதம் இல்லை எனக் கருதும் இத் தமிழ் அரசியல் கைதிகள் காரணமின்றி நீண்ட நாளாக சிறைகளில் வைக்கப்பட்டுள்ளதினால், தம்மை விடுதலையாக்கக் கோரி உண்ணா விரதம் மேற்கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கொடுமையான சம்பவங்கள் தற்செயலாக நடைபெறவில்லை எனவும், முதல்நாள் மிரட்டல், மறுநாள் தடுப்புக் காவலில் உள்ள தமிழ் இளைஞர் ஒருவரின் மண்டையை பிளத்தல், மூன்றாம் நாள் திட்டமிட்ட வகையில் சிறைக் காவலரின் உதவியுடன் சிறைக்கூடத்துள் வைத்தே படுகொலை செய்தல் என மூன்று கட்டங்களில் நிகழ்த்தப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தச் சம்பவம் நடந்த சமயம் காவலில் நின்ற இராணுவத்தினரும் இவ் இனக்கொலைகளை அனுமதித்தது மட்டுமல்லாது, தடுப்புக் காவல் தமிழ் இளைஞர்கள் இருந்தபகுதி மீது சரமாரியாக சுட்டும் உள்ளனர். இதற்கு சான்றாக சிறை மதில்களில் பெரிய ரவை துளைத்த பெரிய துவாரங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் குறித்த மேலதிக விபரங்கள் வருமாறு:

கொழும்பு மகசீன் சிறைச் சாலையில் நீண்டகாலமாக விசாரணையின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் தம்மேல் உடன் விசாரணைகளைத் தொடங்குமாறு அல்லது விடுவிக்குமாறு கோரி கார்த்திகை 27ஆம் நாள் வெலிக்கடைச் சிறைக்கூரை மீது ஏறி உண்ணாவிரதம் இருந்தனர். இவர்களைக் குண்டாந்தடிகளால் கடுமையாகத் தாக்கிய சிறைக் காவலர்கள் அவர்களை கூரைமீது இருந்து பலவந்தமாக இழுத்து இறக்கி உணவைத் திணித்தனர். இந்த உண்ணா விரதிகளைப் பார்க்கச் சென்ற வீரகேசரி நாளிதழின் செய்தியாளரும் சிங்... பொலிசாரால் கடுமை... எச்சரிக்கப்பட்டு விரட்டப்பட்... இதனால் ஏற்பட் நிலைமைக... அடுத்து உண்மைகளை மூடி மறைக்கும் நோக்கில் சிறிலங்கா அரசு, சில தடுப்புக் காவல் தமிழ் இளைஞர்களை களுத்துறைச் சிறைச்சாலைக்கு இடம்மாற்றம் செய்தது.

இந்தத் தடுப்புக் காவல் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான விசமத்தனமான பிரச்சாரத்தை மறுநாள் கார்த்திகை 28இல் திவயின, லங்காதீப போன்ற இனவாத சிங்களப் பத்திரிகைகள் தமிழர்களின் சிறை அறைகளில் வெடிமருந்துகள் கண்டெடுக்கப்பட்டதாக பரப்புரை செய்தன. லங்காதீப இதனைத் தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்து, "விடுதலைப் புலிகள் சிறைச் சாலையில் இருந்து தப்பிச் செல்ல போலித் திறப்புக்களை தயாரித்ததாகவும், சிறைக் காவலர்களைத் தாக்கிவிட்டுத் தப்பியோடத் திட்டமிட்டதாகவும்" கயிறு திரித்தது. இவ்வாறு 1983ஆம் ஆண்டு ஆடி படுகொலைக்கு முன்பாகவும் சிங்களப் பத்திரிகைகள் இனவாதத்தைத் தூண்டக்கூடிய செய்திகளைப் பிரசுரித்தன.

தற்பொழுது கிடைக்கும் செய்திகளின்படி சிங்களக் கைதிகளுக்கு உலக்கை, தடிகள், வாள் போன்ற கருவிகள் சிறைக் காவலர்களால் கொடுக்கப்பட்டு தமிழர் உள்ள அறைகளுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் அந்த ஆயுதம் தரித்த சிங்களக் கைதிகள் தமிழ் இளைஞர்களை படுகொலை செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மருதலிங்கம் தர்மலிங்கம் (24), சண்முகராசா சிவனேசன் (34) ஆகிய இரு தமிழ் இளைஞர்களும் ஒரு முஸ்லிம் இளைஞரும் கொல்லப் பட்டுள்ளனர். மற்றும் காயமடைந்தவர்களில் பதினொரு ... ஆபத்தான நிலையில் களு... துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து கருத்து தெரிவித்... கொழும்புச் சட்டத்தரணியும் மனித உரிமை பேணும் அமைப்பைச் சேர்ந்தவருமான மகேஸ்வரி வேலாயுதம் "1983ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் தமிழர்கள் சிங்களக் கைதிகளால் இனக்கொலை செய்யப்பட்ட அதேபாணியிலேயே இந்த இனக்கொலைகளும் இடம் பெற்றுள்ளன" எனக் கூறியுள்ளார். 10ஆம் திகதிதான் சர்வதேச மனித உரிமை தினம் என்பதும் இவ்வாரம் மனித உரிமை வாரமாக அனுசரிக்கப்படும் நேரத்திலேயே இத் திட்டமிட்ட மனித விரோத இனக் கொலைகள் நடை பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கவை.

கண்துடைப்பு முயற்சியாக மூன்று சிறைக் காவலர்களும முப்பது சிங்களக் கைதிகளும் விசாரணைக்கென தற்காலிகமாக சிறிலங்கா அரசால் கைது செய்யப்பட்டுள்ளனர். ✷

# தமிழர் எழுச்சி நாள்-97

26-11-97 அன்று தமிழ்நாடு புதுச்சேரி அரியாங்குப்பத்தில் உள்ள இராவணன் பகுத்தறிவு இலவச நூலகத்தின் சார்பில் தமிழர் எழுச்சி நாள் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

காலை 10 மணியளவில் நூலகத்தின் முன் சுமார் 300 பேர் திரண்டனர். நூலகத்தில் இருந்து காலை 10.30 மணிக்கு பேரணி தொடங்கிய பொழுது, கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 600 பேராக உயர்ந்தது. வீராம்பட்டினம் சாலையின் ஊடாக ஊர்வலம் சென்றபொழுது மக்கள் சாலையின் இருமருங்கிலும் நின்றபடி ஆதரவுக் குரல்களை ஆரவாரமாக எழுப்பினர். இவ்வேளையில், 1 கி.மீ. நீளத்திற்கு வெடியோசை எழுப்பப்பட்டு, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான முழக்கங்களுடன் வந்து கடலூர்ச் சாலையினை வந்தடைந்ததும் முடித்து வைக்கப்பட்டது. விழாவின் சிறப்பையும், கொண்டாடப்படும் நோக்கத்தையும் மக்களுக்கு விழா ஏற்பாட்டாளர்கள் எடுத்துரைத்தனர். மகிழ்ச்சியைப் பகிர்ந்தளிக்கும் முகமாக இனிப்புகளும் வழங்கப்பட்டன.

பின்னர் பிற்பகலில் புதுச்சேரி அருகே முதலியார் சாவடியில் அமைந்திருக்கும் ஈழத் தமிழர் ஏதிலியர் முகாமிற்குச் சென்ற நூலகத்தினர்,

250 தமிழீழ மக்களுக்கு நூலகத்தின் சார்பில் உணவுப் பொட்டலங்களையும் உடைகளையும் வழங்கினர். ✷

# பொலிசாரின் கைக்குண்டு வெடித்தே 5 பொதுமக்கள் கொலையுண்டனர்

மட்டக்களப்பு சந்தையில் சிறிலங்கா பொலிசார் ஒருவரின் கைக்குண்டு தவறி விழுந்து வெடித்ததினால் ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டு ஐம்பத்து மூன்று பேர் காயமுற்றுள்ளனர். ஆனால் இதனைத் திரிபுபடுத்தி உண்மைக்கு மாறான முறையில் விடுதலைப் புலிப் போராளி ஒருவரின் கைக்குண்டு வெடித்ததிலேயே இந்த பொதுமக்கள் கொலையுண்டதாக சிறிலங்கா அரசு பரப்புரை செய்தது. கொல்லப்பட்ட தமிழர்களின் விபரம் வருமாறு:

கிருஸ்ணபிள்ளை தயாபரன் (24)
முத்துத்தம்பி விஜயன் (57)
மாணிக்கம் கந்தசாமி (43)
சேனாதிராஜா தேவராஜா (56)
சம்பந்தன் தங்கராஜா •

# ஒரே தடவையில் பெருந்தொகை.......

கைப்பற்றப்பட்டு, அதில் உருக்குலைந்து போயிருந்த 20 சடலங்களை விட மீதமான 113 சடலங்களை சர்வதேச போர் மரபுக்கு அமைய, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் விடுதலைப் புலிகள் ஒப்படைத்தனர். இந்தச் சடலங்கள் 4 லொறிகளில் வவுனியாவிலுள்ள சிறிலங்காப் படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டன. காயமடைந்தவர்களில் 294 இராணுவத்தினர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 4ஆம் திகதி அதிகாலை முதல் மதியம் 3 மணிவரை நீடித்த தாக்குதலில் காயமடைந்தவர்களை மீட்க முடியாமல் சிறிலங்கா விமானப் படை தவித்தமை, சிங்கள வான்படை எதிர்நோக்கும் இயலாமையைத் தெளிவாக்கியுள்ளது.

இவ்வெற்றிகரத் தாக்குதலில், 10 பெண் போராளிகள் உட்பட 37 வீரவேங்கைகள் வீரச்சாவடைந்தனர். தாயக விடுதலைக்காக தமது இளைய, இனிய உயிரை ஈகஞ்செய்த அம்மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

சிலவார இடைவெளிக்குப் பின் தரைநகர முயன்ற 'ஜெயசிக்குறுய்' அணிக்கு கிடைத்த இந்த பலத்த அடியினால், சிறிலங்கா இராணுவத் தலைமையகம் நிலைகுலைந்து போயுள்ளது. அத்துடன் 'ஜெயசிக் குறுய்' இராணுவ நடவடிக் கைக்கென கொண்டு வந்திருந்த பெருந் தொகையான இராணுவ தளபாடங்கள், நவீன ஆயுதங்கள் மற்றும் சுடுதிறன் கருவிகள் என்பனவும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டு விட்டன.

சிறிலங்காப் படையினருக்கு சற்றும் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட இத் தோல்வியை அடுத்து, ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்து அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கையை தொடங்க, கால அவகாசம் தேவைப்படுவதாக சிறிலங்கா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும், விடுதலைப் புலிகள் 'ஆட்டிலறி', மற்றும் மோட்டார் தாக்குதல்களை இலக்குத் தவறாமல் மேற்கொள்வதற்கு ஏற்ற திசையறியும் நவீன கருவிகளை, சிறிலங்காப் படையினரிடமிருந்து தாக்குதல்களின்போது கைப்பற்றிவிட்டனர் எனவும் கொழும்புப் பத்திரிகைகள் அச்சம் தெரிவித்துள்ளன. 'ஜெயசிக்குறுய்' படையினரிடையில் இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள சேதங்களில் பாதிக்கு மேல் விடுதலைப் புலிகளின் மோட்டார் மற்றும் 'ஆட்டிலறி' தாக்குதல்களால் ஏற்படுத்தப்பட்டவை எனவும் அப் பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில், இம் மாதம் 9ஆம் திகதி கரிப்பட்டி முறிப்பு பகுதியிலும் கனகராயன் குளத்தை அண்டிய பகுதிகளிலும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. ✷

படை கொண்டு வந்தவன் படையணியை பறிகொடுத்த பரிதாப அனுபவத்தை – புதூர், மன்னம்குளம் ஆகிய இரு முனைகளில் இருந்து கனகராயன்குளம் நோக்கிப் புறப்பட்ட சிறீலங்காப் படையினர் பெற்றுள்ளனர்.

'ஜெயசிக்குறுய்' (வெற்றி நிச்சயம்) என மார்பு தட்டிப் புறப்பட்ட சிறீலங்காப் படையினர்க்கு "தோல்வி நிச்சயம்" என மீண்டும் ஓர்முறை உணர்த்தப்பட்டுள்ளது. ஒரு படையணி – அதுவும் மிகத் திறமையான முறையில் பயிற்சி பெற்றவர்கள் எனக் கூறப்படும் விசேட கொமாண்டோப் படையணி – சற்றும் எதிர்பாராதவிதமாக முற்றாக விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டமை சிறீலங்காவின் "ஜெயசிக்குறுய்"– பாதை திறப்பு வீண் முயற்சிக்கு மட்டுமல்ல முழு இராணுவ நடவடிக்கைகளுக்குமே பலத்த அடியாக அமைந்துள்ளது.

முந்நூறு படையினர் பலியான நிலையில், மேலும் பல நூற்றுக்கணக்கான படையினர் கடுங்காயங்களுடன் மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் யதார்த்தத்தைக் கண்ட சிறீலங்கா – பாதுகாப்புப் படைத் தலைமையகம் மேலும் நடவடிக்கைகளை தொடர்வதற்கு கால அவகாசம் தேடிக்கொண்டு தவிக்கிறது. காட்டுப் பகுதிச் சண்டைக்கென விசேட பயிற்சிகள் கொடுத்து, கொண்டு வந்தவர்களுக்கே இந்தக் கதி என்றால் சாதாரண படையினர் அடி எடுத்து வைக்க முடியுமா என அங்கலாய்க்கின்றனர் சிங்கள விமர்சகர்கள்.

இந்தப் பாரிய தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் பத்துப் பெண் போராளிகள் உட்பட முப்பத்தைந்து விடுதலைப் புலி வீரர்களே வீரச்சாவடைந்தனர். ஆனால், சிறீலங்கா அரசோ தனது இழப்புக்களை திசைதிருப்பப் பல முன்னுக்குப் பின் முரணான புள்ளி விபரங்களை வழமைபோல் பரப்புரை செய்து மகிழ்ந்தது. தமக்கு வசதியான இடம்வரை சிங்களப் படைகளை முன்னேறவிட்டு அதன் முதுகெலும்பையே உடைத்த விடுதலைப் புலிகளின் இராணுவ தந்திரோபாயங்களும் வியூகங்களும் சர்வதேச அவதானிப்பைப் பெற்றுள்ளன. அதேவேளை, சிறீலங்காவின் விமானப்படை தன்னிச்சையான முறையில் தரைப்படைக்கு உதவமுடியாமல் தள்ளாடியமை மற்றுமொரு குறிப்பிடத்தக்க அவதானிப்பாக உள்ளது. ஒரே தடவையில் பெருந்தொகையான விசேட இராணுவக் கொமாண்டோக்களை இழந்த இந்தச் சமரினை – கூட்டு மொத்தமாக – பார்க்கையில் சந்திரிகாவின் இராணுவத் தீர்வு என்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதை மட்டுமல்ல பாதை திறப்பு முயற்சியும் ஆரம்பமாகி ஐந்தாவது மாதத்தை முடித்த நிலையில் – 'சாண் ஏற முழம் சறுக்கிய' கதையாக – சுற்றிச் சுற்றி தொடக்கப் புள்ளியில் நிற்கிறது என்ற யதார்த்தத்தையும் சர்வதேச உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளது. ஆனாலும், சந்திரிகா அரசின் பாதைதிறப்பு பிடிவாதமோ அல்லது இராணுவத் தீர்வு நோக்கோ முடிவுக்கு வந்துவிட்டதாக கூறமுடியாது. ஏனெனில், எப்பாடுபட்டாவது இராணுவ நடவடிக்கைகளை தொடர்வதன் மூலமே தனது அரசின் வரட்டுக் கௌரவத்தை காப்பாற்ற வேண்டுமென்ற வீணான ஆசையில் சந்திரிகா இறுக்கமாக உள்ளார். உரிய தீர்வுகளைக் கொண்டுவர மறுத்து, இலங்கைத்தீவின் பொருளாதாரத்தை மேலும் மோசமாக்கக்கூடிய வகையில் பாதுகாப்புச் செலவீனங்களை பலமடங்காக அதிகரித்துள்ள சந்திரிகா அரசிடம், போரை நடாத்துவதன் மூலமே தன்னைத்தக்க வைத்துக் கொள்ள வேண்டும் எனும் முனைப்பு வலுப்பெற்றுக் காணப்படுகிறது. ஆக– கூட்டுமொத்தமாக பார்ப்பின் – சிறீலங்கா, அப்பாவித் தமிழர்கள் மீதான இராணுவ முற்றுகைகளை – இராணுவ ஆக்கிரமிப்புக்களை – இறுக்கமாக்கி, இனஅழிப்பினால் தமிழீழ மக்களின் தேசப் பாதுகாப்புச் சக்தியை சிதைக்கும் நோக்கிலேயே கருத்தாக இருக்கப் போகிறது. இதனைத் தடுப்பதற்கு ஒரேவழி – சிறீலங்காப் படையினரை தமிழ்த் தாயகத்தை விட்டு துரத்துவது ஒன்றே ஆகும். மன உறுதியும், உயிரையே தமது தேசத்தினை காக்கும் ஆயுதமாகவும் கொண்ட தமிழீழ விடுதலை புலிகளுக்கு முன்னால், ஆக்கிரமிப்புச் சிங்களப் படை வெகுகாலத்துக்கு தாக்குப் பிடித்து நிற்கமாட்டாது என்ற உண்மை பலமுனைகளில் உணர்த்தப்பட்டுவிட்டது. இனியும் பலவழிகளில் உணர்த்தப்படக்கூடிய சாத்தியம் சிறப்பாக உண்டு. இந்த நேரத்தில் படைகளை விலக்கு அல்லது உனது படைகள் விலக வைக்கப்படும் என்ற செய்தியை சர்வதேச தமிழ் மக்கள் சந்திரிகா அரசுக்கு இடித்துக்கூற விரும்புகின்றனர்.

கேட்கச் செவியிருந்தால் கேட்கட்டும். இல்லையேல் அனுபவம் மூலம் கண்டுணர்ந்து படைகளை விலக்கட்டும்!



**படைகளை விலக்கு**

# தாயகத்தை அங்கீகரிக்காத எத்திட்டமும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது

இவ்வருட மாவீரர்தின உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன், விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டினைத் தெளிவாகவே வெளிக்காட்டியுள்ளார். "எந்த ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்திற்கும் தமிழர் தாயகம் அடிப்படையானது. தமிழரின் நிலமானது, தமிழரின் தேசிய வாழ்விற்கும் தேசியத் தனித்துவத்திற்கும் ஆதாரமானது. தமிழர்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் தாயக நிலத்தை அங்கீகரிக்காத எந்த ஒரு திட்டமும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது" என அவர் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இந்நிலைப்பாடானது, தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் அடிப்படையைக் கொண்டதாகும். இந்நிலைப்பாட்டினை விடுதலைப் புலிகள் இயக்கம் உறுதி செய்ய முனைவதில் தவறு எதுவும் இல்லை. ஏனெனில், கடந்தகால வரலாறுகள் அவ்வாறு உறுதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தையும் அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. அதாவது சிறிலங்காவை ஆண்ட சிங்கள ஆட்சியாளர்கள் எவருமே தமிழர் தாயகத்தை சிதைக்கவும் தமிழர் தேசியத்தைப் பலவீனப்படுத்தவும் அல்லது அழிக்கவுமே முனைந்து வந்துள்ளனர். இந்த வகையில் அபிவிருத்தி நடவடிக்கை என்ற ரீதியில் பரந்த அளவில் தமிழர் தாயகத்தை சிங்கள ஆட்சியாளர்கள் அபகரித்துக் கொண்டார்கள். இதன் விளைவாக, தமிழர் தாயகத்தின் பெரும்பகுதி இழக்கப்பட்டுள்ளதோடு, தேசியப் பண்புகளும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளது. அத்தோடு, காலத்துக்குக் காலம் நடத்திய இனக்கலவரங்கள், ஒரு தசாப்தத்துக்கு மேலாக இடம் பெற்றுவரும் பெரும் படை நடவடிக்கைகள் என்பன பாரிய இன அழிப்பாயும் தமிழரின் பொருளாதார அடித்தளத்தைச் சிதைப்பதாயும் இருந்தது. இந்த நிலையில் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுதல் வேண்டுமானால், தமிழர் தாயகம் உறுதி செய்யப்படுதல் அவசியமானதாகியுள்ளது. ஆகையினால், தேசியத் தலைவர் தமிழர் தாயகத்தை வலியுறுத்தி உள்ளமை ஒருவகையில் வரலாற்று நிர்ப்பந்தமே ஆகும். இதில் எவருமே தவறு காணவோ அன்றி விடுதலைப் புலிகள் இயக்கம் வறட்டுத்தனமான பிடிவாதத்துடன் யுத்தத்தை விரும்பி நிற்கின்றது என்று கூறுவதோ நியாயப்பாடான ஒன்றல்ல. சுமார் இரு தசாப்தங்களாக தமது மக்களின் உரிமைக்காகப் போராடிவரும் ஒரு இயக்கம், அவ்வினத்தின் பாதுகாப்பை உறுதிசெய்யாத தீர்வு ஒன்றை எவ்வாறு ஏற்கமுடியும்? மறுவளமாக, தமிழ் மக்களின் உரிமைகளும் பாதுகாப்புக்களும் எனப் பிரச்சாரம் செய்து வரும் சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் புலிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப தமிழரின் பாதுகாப்பை உறுதி செய்யக் கூடியதான தமிழர் தாயகத்தை அங்கீகரிக்க ஏன் தயங்கவேண்டும்? விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏன் இராணுவ ரீதியில் வெற்றி கொள்ள முனைய வேண்டும்? இதற்கு தேசியத் தலைவர் கூறியிருப்பது போன்று, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைச் சமாதான வழியில் தீர்த்து வைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதியும் சந்திரிகா அரசிடம் இல்லை என்பது சரியான பதிலாகும். அவ்வாறு இருந்திருக்குமானால் நியாயமான, நீதியான தமிழரின் தேசியத்தை, தமிழரின் தாயகத்தை உறுதி செய்யும் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்து, விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தைகளை நடத்தி இருக்கும். ஆனால் அரசாங்கமோ அவ்வாறான வழிமுறையைக் கையாள்வதாக இல்லை. அது அரசியல் தீர்வு எனக் கூறிக்கொள்ளும் திட்டங்கள், தமிழர் தாயகத்தை பல கூறுகளாகச் சிதைப்பதோடு, தமிழ்த் தேசிய இனத்தை படிப்படியாக இல்லாது ஒழித்துவிடும் நோக்கம் கொண்டதாகவே உள்ளது. இந்த ரீதியில் தலைவர் பிரபாகரன் கூறியிருப்பது போன்று, **சந்திரிகாவின் தீர்வுத்திட்டமானது, இராணுவத் தீர்வுத் திட்டத்தின் மறுமுகம் என்பது ஏற்புடையதே. இந்த வகையில் இனப்பிரச்சினைக்கு நியாய பூர்வமான ஒரு தீர்வை முன்வைக்காது, விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானத்திற்கு முட்டுக்கட்டை போடுவதாகக் குற்றம் சாட்டுவது உண்மைக்கு மாறானதாகும். மாறாக சந்திரிகா அரசின் அணுகுமுறையே அமைதியைக் குலைப்பதோடு, இலங்கையில் வன்முறை அதிகரிக்கவும், இரத்தம் பெருக்கெடுக்கவும் காரணமாகின்றது.**

> **"எந்த ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்திற்கும் தமிழர் தாயகம் அடிப்படையானது. தமிழரின் நிலமானது, தமிழரின் தேசிய வாழ்விற்கும் தேசியத் தனித்துவத்திற்கும் ஆதாரமானது. தமிழர்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் தாயக நிலத்தை அங்கீகரிக்காத எந்த ஒரு திட்டமும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது"**

ஒட்டுமொத்தமாக, விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்பது, தமிழர் தாயகத்தை அபகரித்து தமிழர் தேசியத்தை சிதைத்துவிடும் குறிக்கோளுடன் மட்டுமே மேற் கொண்டு வரப்படும் நடவடிக்கை என்பதில் ஐயத்துக்கு இடமில்லை.

# 'மாமனிதர்' பேராசிரியர் எலியேசர் அவர்களை பாராட்டி....



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
19.10.1997

பேராசிரியர் கிறிஸ்டி ஜெயரட்ணம் எலியேசர்,
ஈகிள்மொண்ட்,
விக்டோரியா,
அவுஸ்திரேலியா.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஐயா!

ஈழத்தமிழினம் பெருமைகொள்ளும் வகையில் அறிவுலகில் அபூர்வ சாதனைகள் புரிந்துள்ள நீங்கள், நீண்ட காலமாக எமது மக்களின் தேச சுதந்திரப் போராட்டத்திற்கு அரும்பணி ஆற்றி வந்துள்ளீர்கள். தாயக தேசத்தில் பாசம் கொண்டு நீங்கள் ஆற்றிய நற்பணிக்கு எமது விடுதலை இயக்கத்தின் சார்பிலும், எமது மக்களின் சார்பிலும் எனது உளப்பூர்வமான நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அவுஸ்திரேலிய நாட்டில் வாழ்ந்த போதும், தமிழீழத் தாய் பெற்ற மண்ணின் மைந்தர் என்ற தேசாபிமானப் பற்றுணர்வுடன், தமிழீழ மக்களின் விடிவிற்காகவும் தமிழீழ தேசத்தின் விடுதலைக்காகவும் நீங்கள் ஆற்றிய அரும்பணி மெச்சத்தக்கது. தன்னாட்சி உரிமை கோரும் எமது மக்களின் விடுதலைப் போராட்டம் நியாயமானது என்பதை நன்குணர்ந்து, எமது உரிமைப் போருக்காக நீங்கள் குரல் கொடுத்து வந்துள்ளீர்கள். அவுஸ்திரேலிய அரச மட்டத்தில் எமக்காக நியாயம் கேட்டீர்கள்.



தமிழீழ மக்கள், தன்னாட்சி உரிமைபெற்று சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டுமென்பது உங்களது தணியாத இலட்சியமாக இருந்து வருகிறது. அந்த உன்னத இலட்சியத்திற்காகத் துணிவுடனும் நேர்மையுடனும் பணியாற்றி வந்தீர்கள். நீங்கள் உயர்ந்த மனிதர். உன்னத தேசப்பற்றாளர்.

நற்பணியாற்றும் நல்ல மனிதர்களுக்கு மதிப்பளித்து, கௌரவம் செலுத்துவது தமிழரின் பண்பாடு. இந்த சீரிய மரபிற்கு ஏற்ப, உங்களது இனப்பற்றிற்கும் விடுதலைப்பற்றிற்கும் மதிப்பளித்து, உங்களது நற்பணியைப் பாராட்டுமுகமாக "மாமனிதர்" என்ற அதியுயர் தேசிய விருதை உங்களுக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன்.

உங்களது நற்பணி தொடரவும், உங்களது நல்வாழ்வு சிறப்புறவும் எனது நல்லாசிகள்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

அன்புடன்,

(வே. பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

---

அனைத்துலகச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
03-12-1997.

வரலாறு ஒருபோதும் தரித்து நிற்பதில்லை, ஈழத் தமிழர்களின் வரலாறு கடந்த சில நூற்றாண்டுகளாக அந்நியர்களின் வரலாறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழீழ வரலாற்றை எமதாக்கிக் கொள்ள, தலைவரின் வழிகாட்டலில் ஈழத்தமிழினம் செய்யும் தியாகங்கள் அளப்பரியன. களத்திலே எதிரியை எதிர்த்துப் போராடி வீரமரணமடைந்த மாவீரர்கள் பலர். ஆயுதம் ஏந்தாது தமிழீழ விடுதலைக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்தவர்கள் பலர். இவர்கள் மாமனிதர்களாக எம்முன் வாழ்கின்றார்கள். சிங்கள அடக்குமுறைகளிலிருந்து தம்மைப் பாதுகாக்கவென அந்நியநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தோர் பலர். இவர்களில் சிலரின் பணியும் பங்களிப்பும் தமிழீழ விடுதலைக்கு உரம் ஊட்டுகின்றன.

விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை, விடுதலையின் தேவையை, அவசியத்தை உலகுக்கு உணர்த்த வேண்டியது, புலம்பெயர்ந்தோர் கடமையாகும். அதிலும் சிறந்த கல்வியாளர்களினதும், விஞ்ஞானிகளினதும் பணி மிகமிக அவசியமாகின்றது. இவ்வகையில் கணிதவியல் விஞ்ஞானியான பேராசிரியர் எலியேசர் அவர்களின் தாயக விடுதலைக்கான பங்களிப்பும், அர்ப்பணிப்பும் தலைவரால் இனம்காணப்பட்டு மாமனிதராகப் போற்றப்பட்டதையிட்டு நாம் பெருமிதம் கொள்கின்றோம். ஏனையவர்கள் அறிந்து கொள்ளாவிட்டாலும் பேராசிரியர் எலியேசர் அவர்கள் மாமனிதராகத் தமிழீழ மக்கள் மத்தியில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதானது, தமிழீழ வரலாற்றில் அவரின் சேவையும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

மாமனிதராக தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் எலியேசர் அவர்களை இந்நாளில் நாமும் வாழ்த்துகின்றோம். கௌரவிக்கின்றோம்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

---

ஐக்கிய தமிழர் அமைப்பு
இலண்டன்
03-12-97

மதிப்பிற்குரிய பேராசிரியர் எலியேசர் அவர்கட்கு,

தமிழீழத் தேசிய மாவீரர் நாளன்று, தங்களிற்குத் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் "மாமனிதர்" விருது வழங்கப்பட்டதை அறிந்தோம். *தமிழீழத்திற்கு வெளியே முதல் தடவையாக இவ் அதியுயர் விருதைப் பெற்றுக்கொண்ட தங்களிற்கு எமது மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.*

தென்துருவ தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவராக இருந்து கொண்டு, தாங்கள் தமிழினத்திற்கு ஆற்றிய பணிகளை தமிழீழம் உட்பட உலகெங்கனும் பரவி வாழும் எம்மினம் அறியும். *வெளிநாட்டில் இருந்து கொண்டும் ஈழத்திற்காகப் பணிபுரிந்த ஒரு முக்கியமானவராகத் தேசியத் தலைவர் அவர்களின் விருது தங்களைக் கௌரவிக்கிறது எனக்கூறின் அது மிகையாகாது.* பல்லாண்டுகள் வெளிநாட்டில் வாழ்ந்த போதும், தமிழீழ மண்ணை மறவாது தமிழீழத் தாகத்துடன் தாங்கள் ஆற்றிய சேவைகள் அளப்பெரியவை. அவற்றைச் சொற்களில் விவரித்திடல் இயலாது. தங்களால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள், தமிழீழ மக்கள் எதிர்கொண்ட இன்னல்களை வெளியுலகிற்குக் கொண்டு வருவதில் பெரும் பங்காற்றின என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் இன்று மாமனிதர் விருதைத் தாங்கி நிற்கும் நீங்கள் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிற்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறீர்கள்.

வெகு சமீபத்தில் தங்களது பிறந்த தினத்தை மெல்போணில் கொண்டாடினீர்கள் என அறிந்தோம். தங்களிற்கு எமது பிறந்த நாள் நல்வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களே!

தமிழீழ விடுதலைக்காக அரும்பணி புரிந்த தங்களது பெயர் சுதந்திர தமிழீழத்தின் வரலாற்றுப் பக்கங்களில் பொன்னால் பதிக்கப்பட்டிருக்கும். தாங்கள் என்றென்றும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிலைத்திருப்பீர்கள்.

இங்ஙனம்

(பொறுப்பாளர்)

---

விக்டோரியா தமிழ்ச் சங்கங்கள் கூட்டமைப்பு,
விக்டோரியா,
அவுஸ்ரேலியா,
06-11-97.

பிரபல்யமான அவுஸ்திரேலியா வாழ் தமிழரான பேராசிரியர் கி.யே. எலியேசருக்கு அவுஸ்திரேலிய அரசு, 1995இல் அவரின் சேவையைப் பாராட்டி "ஓடர் ஒவ் ஒஸ்ரேலியா" (A.M) எனும் சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்தது. இவ்வாண்டு அவர் தமிழீழ மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்துக்கு ஆற்றிவரும் அளப்பரிய பணிகளைக் கௌரவித்து மிக உயர் விருதான "மாமனிதர்" விருதை தமிழீழத் தேசத் தலைவர் பிரபாகரன் வழங்கியுள்ளார். அவுஸ்திரேலியா வாழ் தமிழர்களாகிய நாங்கள் பேராசிரியர் எலியேசருக்குக் கிடைத்திருக்கும் இவ் அதிஉயர் கௌரவத்தையொட்டி பெருமை கொள்கிறோம்."

இவ்வாறு, விக்டோரியா தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு பேராசிரியர் எலியேசர் அவர்களுக்குக் கிடைத்த இவ் உயர் விருதான 'மாமனிதர்' விருதையொட்டி ஏற்பட்ட மகிழ்ச்சியினை வெளியிட்டுள்ளது.

# பட்டறிந்தது பாரதம்

"மூன்று மாத காலத்துக்குள்ளேயே ஜயசிக்குறுய் நடவடிக்கையின்போது, 530 படையினர் கொல்லப்பட்டதுடன், 3,200 படையினர் காயப்பட்டுள்ளனர். (இப்போது



இது இன்னும் அதிகம் என்பது வேறுவிடயம்) இந்தப் படை இழப்பானது, கிட்டத்தட்ட ஒரு வருடகாலமாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக நடத்தப்பட்ட சூரியக்கதிர் நடவடிக்கையில் ஏற்பட்ட இழப்பைவிட அதிகமாகும். சூரியக்கதிர் நடவடிக்கையின்போது, 14 அதிகாரிகள் உட்பட 436 படையினர் கொல்லப் பட்டனர். 3,117 பேர் காயமுற்றனர்"

என்று ஒப்பிடுகின்றார், சண்டே ரைம்ஸின் பாதுகாப்புச் செய்தியாளர் திரு. இக்பால் அத்தாஸ் அவர்கள்.

வன்னிப் படைநடவடிக்கை, "ஆழம் அறியாமல் கால்வைத்த செயல்" ஆகத்தான், தென்னிலங்கையின் சிங்கள, ஆங்கில பத்திரிகைகளிலும் விபரிக்க ப்பட்டது. எதிர்க்கட்சியும் கேலி செய்யத் தொடங்கியது.

சரி, இந்நிலையில் சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அவர்கள் என்ன சொல்லுகிறார். பார்ப்போம்.

"இந் நடவடிக்கையின் நோக்கம் கிளிநொச்சி வரையான விநியோகப் பாதையைத் திறப்பதாகும்: இதற்காக நாங்கள் அவசரப்படவேண்டும் என்றில்லை. பிடிபட்ட பாதை பாதுகாப்பானது என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். ஆகவே கைப்பற்றிய பாதை போக்குவரத்துக்குப் பாதுகாப்பானது என்பதை உறுதிசெய்துகொண்டு, கிலோமீற்றர் கிலோமீற்றராகவாவது

முன்னேறுவர். எங்களது துருப்பினர் துடிப்பானவர்கள். அவர்கள் எப்போதும் சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். மேலும் முன்னேறுவதற்காகத் தங்களது நிலைகளைப் பலப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்."

தமது நிலைகளைப் பலப்படுத்திக் கொண்டிருந்த அந்தத் துடிப்பான துருப்பினர் மீது, 1997-08-01 அன்று இரவு 10.30 மணியளவில் சீறிப்பாய்ந்தனர் புலிகள். ஓமந்தையில் அமைந்திருந்த வன்னிப் பிரதேசத்திற்கான இராணுவத் தலைமையகத்தின் மீதும் அதைச் சூழவுள்ள 2 கிலோமீற்றர் வரையான பகுதியிலும் புலிகள் அழித் தொழிப்பு நடவடிக்கையை ஆரம்பித்தனர். இந்நட வடிக்கையின் போது 135 படையினர் கொல்லப்பட்டனர். 400 படையினர் காயமடைந்தனர். சிறி லங்காவின் 'துடிப்பான', 'எப்போதும் சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற துருப்பினர்', புலிகளின் அன்றைய தாக்குதலில் CIS 40 m.m 40A G L தானியங்கி கிரனைட் செலுத்திகள், விமான எதிர்ப்பு இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட பல நவீனரக ஆயுதங்களை பெரிய மனதுடன் புலிகளுக்கு தாரை வார்த்தனர். யுத்தமுனையில் தம்மால் பணியாற்ற முடியாது என்று காவல்துறையினர் பலர் வவுனியாவுக்குத் தப்பியோடினர்.

"மேலும் முன்னேறுவதற்காக தங்களது நிலைகளைப் படையினர் பலப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்" என்ற கூற்றைக் கேள்விக்

குறியாக்குவதுபோல அமைந்திருந்த அன்றைய தாக்குதலில் 37 பெண் போராளிகள் உட்பட 126 விடுதலைப் புலி வீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

இது ஜெயசிக்குறுய் நடவடிக்கைப் படையினர் மீதான புலிகளின் மூன்றாவது ஊடுருவித் தாக்குதலாகும்.

55வது படைப்பிரிவு புளியங்குளத்தைக் கைப்பற்றிவிட்டது என்று படைத் தலைமை நீண்ட நாட்களின் முன்னர் விட்ட அறிக்கை புளித்து பூஞ்சணம் பிடித்த நிலையில், அன்று வரை (1997-08-01) படையினரால் புளியங்குளம் கைப்பற்றப்படாத நிலையில் நடாத்தப்பட்ட தாக்குதல் ஆகும்.

சிறிலங்காவின் கிரிக்கட் அணியின் தொடர் வெற்றிகளால் அல்லது வெற்றிகள் பற்றி முதன்மைப்படுத்தப்பட்ட செய்திகளால் தம்மை மறந்த நிலையிலிருந்த சிறீமான் சிங்களப் பொதுசனத்துக்குச் சில நாட்களாக மனதே சரியில்லை. திடீர் திடீரென தனக்குள் இருந்து இன்னொரு குரல் தன்னுடன் கதைப்பதுபோல் உணர்வு அவருக்கு.

"1997. 08. 19 அன்று பழையவாடிப் பகுதியிலிருந்து புளியங்குளம் நோக்கி முன்னேற முயன்ற படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் இரண்டு யுத்த டாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டன. துருப்புக்காவி கவசவாகனமொன்றும் கைப்பற்றப்பட்டது. இரண்டு டாங்கிகள் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டன. நாற்பதுக்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். நூற்றைம்பது படையினர் காயமுற்றனர்.

1997. 08. 20 அன்று பழைய வாடியிலிருந்து புளியங்குளம் நோக்கி

அழிக்கப்பட்டது. இரண்டு டாங்கிகள் சேதமாக்கப்பட்டன. இருபத்தைந்து படையினர் கொல்லப்பட்டனர். நூறு படையினர் காயமடைந்தனர்.

1997-09-11 அன்று, அதற்கு முதல் நாள் முன்னேறி வந்து புதூரில் நிலைகொண்டிருந்த படையினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில், நாற்பதுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். இரு நூறுக்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தனர்.

1997-09-12 அன்று புளியங்குளம் பகுதியில் வைத்து M I 24ரக உலங்கு வானூர்தி விடுதலைப் புலிகளால் சுடப்பட்டு, பலத்த சேதமடைந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

1997-09-15 அன்று புளியங்குளம் நோக்கி முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பன்னிரண்டு படையினர் கொல்லப்பட்டு எழுபது பேர் காயமடைந்தனர்.

இவ்வாறு, நீண்டு தொடர்கிறது ஜயசிக்குறுய் படையினரின் கள நிலவரம்.

திடுக்கிட்டுப்போன சிறீமான் சிங்களப் பொதுசனம் தலையைச் சொறிந்து கொண்டார். என்ன இது? திடீரென்று என்னென்னவோ செய்திகளெல்லாம் காதில் விழுகிறதே! கனவுதான் கண்டேனா? அல்லது யாராவது வந்து சொல்லி விட்டுப் போனார்களோ என்று குழம்பியவர் தலையைப் பிய்த்துக்கொண்டு ஓட ஆரம்பித்தார்.

திருகோணமலையின் புல்மோட்டைக்கு அருகே உள்ள கடற்பரப்பில் ஒரு புதிய காட்சி விரிகிறது.

# பட்டும் அறியாமல் சிங்களம்


முன்னேற முயன்ற படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதில், ஒரு டாங்கி அழிக்கப்பட்டது. இரண்டு டாங்கிகள் முற்றாகச் சேதமாக்கப்பட்டன. நூற்றுக்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். நூற்று எண்பத்தைந்துக்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர்.

1997-8-22 அன்று புளியங்குளம் நோக்கி முன்னேற முயன்ற படையினரை, விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் இரண்டு டாங்கிகள் சேதமாக்கப்பட்டன.

1997-08-26 அன்று புளியங்குளம் நோக்கி இரு முனைகளில் முன்னேறிய படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் தாக்கியதில் ஒரு டாங்கி

MV கோடியாலிற்றி எனும் சீனாவுக்குச் சொந்தமான கப்பல், 30,000 தொன் இல்மனைற்றுடன் புறப்படுவதாக இருந்தது. அன்று 89 மில்லியன் ரூபா பெறுமதியான 27, 350 தொன் இல்மனைற் ஏற்றப்பட்டிருந்தது.

1997-09-09 அதிகாலை பன்னிரண்டு முப்பது மணியளவில் MV



கோடியாலிற்றியை நெருங்கிய கடற்புலிகளும் சிறுத்தைப் படையணியின் கடற் பிரிவினரும் கப்பலின் தளத்தில் ஏறியும் கடலில் இருந்தும் தாக்கத்தொடங்கினர். ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் தாக்குதல் நீடித்தது. கப்பல் எரியூட்டப்பட்டது. திடீரென வானில்

தொடர்ச்சி 6 ம் பக்கம்......

"மூன்று மாத காலத்துக்குள்ளேயே ஜயசிக்குறுய் நடவடிக்கையின்போது, 530 படையினர் கொல்லப்பட்டதுடன், 3,200 படையினர் காயப்பட்டுள்ளனர். (இப்போது இது இன்னும் அதிகம் என்பது வேறுவிடயம்) இந்தப் படை இழப்பானது, கிட்டத்தட்ட ஒருவருடகாலமாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக நடத்தப்பட்ட சூரியக்கதிர் நடவடிக்கையில் ஏற்பட்ட இழப்பைவிட அதிகமாகும். சூரியக்கதிர் நடவடிக்கையின்போது, 14 அதிகாரிகள் உட்பட 436 படையினர் கொல்லப்பட்டனர். 3,117 பேர் காயமுற்றனர்"

என்று ஒப்பிடுகின்றார், சண்டே ரைம்ஸின் பாதுகாப்புச் செய்தியாளர் திரு. இக்பால் அத்தாஸ் அவர்கள்.

# சுதந்திரம் இல்லாத சுதந்திரதினம்!

சிறிலங்காவின் ஐம்பதாவது சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்கான ஆயத்தங்கள் இப்பொழுது இருந்தே ஆரம்பமாகிவிட்டன. இந்தச் சுதந்திரதினக் கொண்டாட்டங்களின்போது, எடுக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தே சந்திரிகா அரசும் அதன் பாதுகாப்புத்துறையும் தலையைக் கசக்கிக் கொண்டிருக்கின்றன. கொண்டாட்டங்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பகுதிகளில், சோதனைச் சாவடிகளையும், பாதுகாப்பரண்களையும் அமைக்கும் வேலைகளில் படையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ள இளம் இராணுவத்தினரும் தொண்டர் படையினரும் ஈடுபட்டுள்ளனர். வீதித் தடைகள் அமைப்பது தொடக்கம், மக்களின் பாவனையில் இருந்து எவ்வீதிகளைத் தவிர்ப்பது என்பதுவரை கூடியிருந்து ஆராய்கின்றனர். விமான எதிர்ப்புக் கருவிகளை எங்கே பொருத்துவது? காலாட்படையையும் கடற்படையையும் விமானப்படையையும் எங்கெங்கே நிறுத்துவது ? என்பது வரையிலான பிரச்சினைகள் பிரதான பாத்திரம் வகிக்கும் உயர்மட்ட பாதுகாப்புக் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன.

இதுதான், ஐம்பதாவது சுதந்திரதினத்தை எதிர்வுகொண்டுள்ள சிறிலங்காவின் பரிதாபகரமான நிலை. ஒரு நாட்டின் சுதந்திரதினத்தை, மகிழ்ச்சிப் பெருக்குடன் ஆடிப்பாடி, அந்நாட்டினம் களிப்புடன் எதிர்வுகொள்ளும். ஆனால் சிறிலங்கா பீதியுடன் தன் சுதந்திரதினத்தை எதிர்கொள்கின்றது.

சிறிலங்காப் படையினரின் கண்களுக்கு தமிழர்கள் உறுத்திக் கொண்டிருக்கின்றனர். உரிய காலத்தில் தமிழர்களை வகைதொகையின்றி அள்ளிச் சென்று சிறையுள் தள்ளி, நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் திட்டங்கள் இப்பொழுதில் இருந்தே வரையப்படுகின்றன. தமிழர்களின் இருப்பிடங்கள் கணக்கெடுக்கப்படுகின்றன. கண்காணிக்கப்படுகின்றன. பெப்ரவரி நெருங்க, ஏதாவது ஒரு காரணம்கூறி தமிழர்கள் வகைதொகையின்றி கைதுசெய்யப்படுவர். சிங்களவர் தேசியக்கொடி ஏற்றுவர்.

> ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின்போது, குறைந்த இழப்புடன் கூடிய இராணுவத்தினரைக் கொன்றொழித்த சந்தர்ப்பம், காட்டுச்சண்டைபற்றிய விசேடபயிற்சி பெற்ற இந்த இராணுவக் கொமாண்டோக்களுடனான சண்டையில்தான் விடுதலைப் புலிகளுக்கு வாய்த்திருக்கின்றது.

படையெடுப்பொன்றை எதிர்கொள்ளும் பாங்குடன் நடைபெறும் செயற்பாடுகள் மத்தியில், பீதியுடன் தேசியக்கொடி ஏற்றுவதென்பது உண்மையான சுதந்திரத்தைச் சுட்டிநிற்கா.

இலங்கைத்தீவில், தமிழ்த்தேசிய இனமும் சிங்களத் தேசிய இனமும், தங்கள் தங்கள் தேசியக்கொடிகளை ஏற்றி தமது சுதந்திரத்தை கொண்டாட வேண்டிய நிலையில், தமிழ் மக்களின் சுதந்திரத்தைப் பறித்து, தேசியத்தைப் பழித்து, இனத்தையே அழிக்கத் துடித்து நிற்கும் சிங்களம் தன் சுதந்திரத்தைத் தொலைத்து நிற்கின்றது என்பதே தற்போதைய நிஜமாகியுள்ளது.

அச்சத்தில் உறைந்து போயிருக்கும் சிங்களத்திற்கு, ஊட்டச்சத்து கொடுக்க தற்போதைய சிறிலங்காவின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், புதிய கணிதம் ஒன்றை வரைந்துள்ளார். பெப்ரவரி 4ம் திகதி நடைபெற இருக்கும் சுதந்திரதினக் கொண்டாட்டத்திற்கு முன்னதாக, இராணுவ வெற்றிச் செய்தியொன்றை அறிவிக்க அவர் துடித்து நிற்கின்றார். மே மாதம் ஆரம்பித்து, ஏழு மாதங்கள் கடந்துள்ள ஜெயசிக்குறுய் பாதைதிறக்கும் இராணுவ நடவடிக்கையை சுதந்திரதினத்திற்கு முன்னதாக முடித்து வைக்க அவர் விரும்புகின்றார். டிசம்பர் 12ஆம் திகதி, சர்வதேச செய்தியாளர் மத்தியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். என்ன விலைகொடுத்தும், இன்னும் ஏழு வாரங்களுக்குள் ஜெயசிக்குறுய் நடவடிக்கை முடித்து வைக்கப்படும் என அவர் அங்கு சூளுரைத்துள்ளார்.

இந்த ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையை தொடர்வதில் ஆர்வம் காட்டாமல், அதன் பாதக நிலையைச் சுட்டிக்காட்டி, தயக்கம் காட்டிய தளபதிகள் மாற்றப்பட்டு, புதிய தளபதிகள் நியமிக்கப்பட்டு, புதிதாக ஆயிரம் அளவிலான விசேட பயிற்சிபெற்ற இராணுவக் கொமாண்டோக்கள் முன்னணி வகுக்க, மேலதிகமாக குவிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினர் பங்குபற்றிய மூன்றாம்கட்ட இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகி ஒருமாதம் கடந்துவிட்டது. இறுதியானதும் உறுதியானதுமான வெற்றியைத்தொடும் நடவடிக்கை என கூறிக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மூன்றாம் கட்டம் எடுத்த எடுப்பிலேயே, பாரிய தாக்குதலைச் சந்தித்து மூச்சடங்கியுள்ளது. விசேடமாக காட்டுச் சண்டைகளுக்கென கடும் பயிற்சிபெற்ற இராணுவக் கொமாண்டோக்களை, தந்திரமாக நகரவைத்து, சுற்றிவளைத்து விடுதலைப் புலிகள் தாக்கியுள்ளனர். முன்னூறு இராணுவத்தினர் கொல்லப்பட நானூறு பேர் காயமடைந்துள்ளனர். ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின்போது, குறைந்த இழப்புடன் கூடிய இராணுவத்தினரைக் கொன்றொழித்த சந்தர்ப்பம், காட்டுச் சண்டைபற்றிய விசேடபயிற்சி பெற்ற இந்த இராணுவக் கொமாண்டோக்களுடனான சண்டையில்தான் விடுதலைப் புலிகளுக்கு வாய்த்திருக்கின்றது. இந்த இழப்பை எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயன்று சிறிலங்கா அரசு மறைக்க முனைந்தது. என்றாலும், படைத்துறை ஆய்வாளர்கள் குறிப்பிடுவதுபோல இந்த இழப்பை ஈடுசெய்ய அதற்கு காலஅவகாசம் தேவைப்படும் என்பது உண்மையே.

> படையெடுப்பொன்றை எதிர்கொள்ளும் பாங்குடன் நடைபெறும் செயற்பாடுகள் மத்தியில், பீதியுடன் தேசியக்கொடி ஏற்றுவதென்பது உண்மையான சுதந்திரத்தைச் சுட்டிநிற்கா.

ஏழு மாதங்கள் கடந்து, எட்டாவது மாதத்தில் காலடி எடுத்து வைத்துள்ள, வரலாறு காணாத இந்த இராணுவ நடவடிக்கையை எந்தத் தென்புடன், ஏழுவாரத்தில் முடித்துவைப்பதாக அமைச்சர் ரத்வத்த குறிப்பிட்டிருக்கின்றார் என்பது அவருக்கே வியப்பாக இருக்கக்கூடும்.

நாட்டின் தேவை ஏதோவாய் இருக்க, சந்திரிகா அரசின் தேவை இந்தப் பாதை திறப்பாய் அமைந்துவிட்டது என்பதுதான் பரிதாபம். முன்வைத்த காலை பின்னெடுக்கமுடியாத இடுக்கில் சிக்கியுள்ள அரசு, எவ்வளவு விலை கொடுத்தும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளத் தயாராகிவிட்டது தென்பதே அமைச்சர் ரத்வத்தயின் செய்தியாக உள்ளது. அமைச்சரின் கருத்தும் குறிக்கோளும் தீர்க்கமாய் இருந்தாலும், களத்தில் நிற்பது படையினர் மட்டுமே. யுத்தத்தை நடத்துபவர்கள் அவர்களே. அமைச்சர் ரத்வத்த தனது அலுவலகத்தில் இருந்து தீர்மானிக்கும் இராணுவ நடவடிக்கையாக இது இருந்திருக்குமானால், ஜெயசிக்குறுய் பாதை திறப்பு நடவடிக்கை சில நாட்களிலேயே முற்றுப் பெற்றிருக்கும். இவை எல்லாவற்றையும் விட, இந்தப் பாதைதிறப்பு நடவடிக்கையின் தலைவிதி, வன்னிக்காட்டில் சிக்குண்டு, திக்குத்தெரியாமல் தள்ளாடித் தடுமாறுகின்றதென்பதே உண்மை. ✷

**-சுப்பு**

> கடந்த ஐம்பது ஆண்டு காலமாக, அடக்குமுறை என்ற ஒரே வழியில்தான் சிங்களம் சென்று கொண்டிருக்கின்றது. இந்தக் குருட்டுத்தனமான அணுகுமுறையால்தான் இலங்கையில் அமைதி குலைந்து போரும் வன்முறையும் தலைதூக்கி நிற்கின்றன. இந்த அணுகுமுறையைச் சிங்கள தேசம் மாற்றிக்கொள்ளாவிடின், முடிவில்லா யுத்தத்தையும் பேரழிவையுமே அது சந்திக்க வேண்டிவரும். இந்த அழிவுப் பாதையைத் தேர்ந்தெடுத்து நிற்பது, சிங்களப் பேரினவாதிகளேயன்றி, நாமல்ல.
>
> *- தமிழீழத் தேசியத்தலைவர்*

# பட்டறிந்தது பாரதம்......

எழுந்த தீச்சுவாலையைக் கண்ட பின்னர்தான், புல்மோட்டையில் இருக்கும் இராணுவத் தளமான S.F.3 சம்பவம் பற்றி அறிந்துகொண்டது. அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் கடலில் என்ன நடக்கின்றது என்பதே புரியவில்லை. கப்பல் தீப்பற்றி எரிவது மட்டும் கண்ணுக்குத் தெரிந்தது. விடிந்த பின்னரே நடந்துமுடிந்த விடயம் என்ன என்பது தெளிவாகியது.

MV கோடியாலிற்றியின் பாதுகாப்புக்கென நின்ற நான்கு கண்ணாடி இழைப் படகுகளில் ஒன்று மட்டும், மூன்று படையினருடன் கரை சேர்ந்தது. மூன்று படையினர் நீந்திக் கரை சேர்ந்தனர். கடற்படையின் பீரங்கிப் படகொன்று பீரங்கி இல்லாத நிலையில் மீட்கப் பட்டது. இரண்டு பீரங்கிப் படகுகளையும் ஆறு படையினரையும் காணவில்லை என்று தேடத்தொடங்கினர். முடிவில் ஆறு படையினரும் நான்கு தொழிலாளரும் உட்பட பத்துப்பேர் கொல்லப்பட்டதாகவும் ஏழு படையினரும் ஐந்து மாலுமிகளும் ஐந்து தொழிலாளர்களுமாக பத்தொன்பது பேர் காணாமற்போனதாகவும் கண்டு பிடிக்கப்பட்டது. படையினரின் மூன்று படகுகளை முறியடித்துவிட்டு, ஒன்றைக் கைப்பற்றியவாறு இழப்புக்கள் எதுவுமின்றி திரும்பினர் கடற்புலிகளும், சிறுத்தைப் படையணியின் கடற் பிரிவினரும்.

தாயகத்தின் வளங்களைத் தொடர்ந்தும் சுரண்டிவரும் சிறிலங்கா அரசுக்குக் கொடுக்கப்பட்ட அந்த முறையான அடியில், பெண் புலிகள் தம்பங்கை கச்சிதமாக ஆற்றினர்.

எமது தாயகத்தின் வளங்களை எதிரி அபகரிப்பதை எம்மால் அனுமதிக்க முடியாது என்பதை விளக்கி, விடுதலைப் புலிளின் தலைமைச் செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டமை அனைவரும் அறிந்ததே.

இலட்சக்கணக்கான படையினருடனும் ஏராளமான ஆயுத தளபாடங்களுடனும் எம் மண்ணுக்கு வந்து, வந்த நோக்கம் நிறைவேறாமலேயே தோல்வியுடன் நாடு திரும்பிய இந்திய இராணுவத்தின் தளபதிகளில் ஒருவரான திரு. ஏ. எஸ். கல்கத் அவர்கள் ஜயசுக்குறுய் நடவடிக்கை பற்றி என்ன நினைக்கிறார்?

"சதுப்பு நிலத்தில் சிக்கியது போன்று, இடைநடுவில் ஜயசிக்குறுய் படைகள் தரித்து நிற்கிறது. கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் இராணுவம் பெரும் இழப்புக்களுடன் கிளிநொச்சியைச் சென்றடையலாம். ஆனால் வரையறுக்கப்பட்ட காலத்துக்கு மட்டுமே பாதையைத் திறந்து வைத்திருக்க முடியும்" என்கிறார் திரு. கல்கத். "அது சரி: இந்த மண்ணில் அனுபவப்பட்ட உங்களுக்கு இது புரிகிறது. ஆனால் என்ன பயன். சிங்களப் பேரினவாதிகளின் முயல்கள் எல்லாமே மூன்று கால்களை மட்டும் உடையன அல்லவா?" என்கிறார் சிறீமான் தமிழ் பொதுமகன். ✷

> "சதுப்பு நிலத்தில் சிக்கியது போன்று, இடைநடுவில் ஜயசிக்குறுய் படைகள் தரித்து நிற்கிறது. கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் இராணுவம் பெரும் இழப்புக்களுடன் கிளிநொச்சியைச் சென்றடையலாம். ஆனால் வரையறுக்கப்பட்ட காலத்துக்கு மட்டுமே பாதையைத் திறந்து வைத்திருக்க முடியும்"என்கிறார் திரு. கல்கத். "அது சரிஹ இந்த மண்ணில் அனுபவப்பட்ட உங்களுக்கு இது புரிகிறது. ஆனால் என்ன பயன். சிங்களப் பேரினவாதிகளின் முயல்கள் எல்லாமே மூன்று கால்களை மட்டும் உடையன அல்லவா?"

# நெஞ்சை விட்டகலா நினைவுகளில் நீங்கள்



**மேஜர் யாழினி**
(ராகினி சிவசுப்பிரமணியம்)
சேமமடு, வவுனியா
பிறப்பு: 1971-02-05
வீரச்சாவு: 1997-06-10

எந்த விடயத்திலும் கண்டபடி அலட்டிக்கொள்ளாத அமைதியான போராளி. அவளுக்குள்ளே கனன்று கொண்டிருந்த எரிமலையைப் பற்றியோ, உள்மனப் போராட்டங்களையோ, ஆழ்ந்து ஊறுகின்ற மென்மையைப் பற்றியோ நாங்கள் உணர்ந்ததில்லை. எல்லாவற்றையும் தனக்குள் பூட்டிவைத்தது போன்ற அமைதி. தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்கின்ற பண்பு. தான் நெருங்கிப் பழகுகின்ற ஒரு சில போராளிகளுக்கு மட்டுமே தன்னைப்பற்றி வெளிப்படுத்திய சில தருணங்கள். அவற்றுக்குள்ளே அவளது உறுதியையும் வேகத்தையும் மிகுந்த துணிச்சலையும் மட்டும் அறிந்து கொண்டோம். அதுதான் அவளைக் கரும்புலியாகச் சாதிக்கவைத்ததோ.

யாழினியின் அக்கா 2ம் லெப். தர்சினி இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின்போது வீரச்சாவடைய, அக்காவின் பாதையில் தானும் போகவேண்டும் என்று கூறிக்கொண்டிருந்த யாழினி, போராட்டத்தோடு தானும் இணைந்து கொண்டாள்.

மணலாற்றில் அரசபடைகளின் கஜபார இராணுவ நடவடிக்கையை முறியடிக்க நாம் அமைத்த சண்டைக்களம் இவளது முதற்களம். அந்தச் சண்டையின்போது அவள் மணலாற்றுக் காட்டிலே நின்றாள். ஆரம்பப்பயிற்சி ஆரம்பித்து ஏழு நாட்கள்தான் முடிவுற்ற நிலையில் இவர்களுக்கு காவும் குழுவேலை கொடுக்கப்பட்டது. இறுதிநேரச் சண்டை எதிர்பார்த்ததைவிட அமர்க்களமாக நடந்ததால் அதுவே இவளுக்குப் பெரிய அனுபவமாக இருந்தது.

மணலாற்றிலிருந்து புகைப்படப் பிரிவுக்குவந்து, புகைப்படக் கலையைக் கற்றுக்கொண்டிருந்தபோதுதான் கரும்புலியாகப் போகவேண்டும் என்பதே அவளின் மூச்சாகிப்போனது. அங்கிருந்தபடியே மாதத்திற்கு குறைந்தது ஒருதடவையாவது தலைவருக்குக் கடிதம் எழுதுவாள். அதன்படி அவள் கரும்புலியாகத் தெரிவுசெய்யப்பட்டு, வேவுப்பயிற்சி அளிக்கப்பட்டு, வேவுகளில் ஈடுபட்டாள்.

ஒருமுறை இயக்கச்சிப்பகுதியில் வேவு எடுக்கச்சென்ற சமயத்தில் நாரிப்பகுதியில் அவளுக்குப் பலமான காயம். அந்தக் காயத்தினால் சிறிதுகாலம் நாரிப்பகுதியில் உணர்வின்றி இருந்தாள். அந்த நாட்களிலும் கரும்புலியாகப்போய் சாதிக்கவேண்டும் என்ற உறுதிமட்டும் குலையவில்லை.

அந்தச்சம்பவம் எங்களுக்குள் இன்னும் அவளது ஆற்றலை, செய்துமுடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைப் பதியவைத்த சம்பவமாகும். சூரியக்கதிர்-1 இராணுவ நடவடிக்கை நடந்து கொண்டிருந்த நேரம். அதுஒரு நிலவுநாள். வலிகாமம் மேற்கில் ஒருபகுதியில் வேவு எடுத்துவரவேண்டும். எல்லோரும் போய் சிக்கல்பட்டு திரும்பிவந்துகொண்டிருந்த நேரம்.

"நான் போய் எடுத்துவாறன்"

என்று உறுதியளித்தபடி யாழினி போனாள். சொன்னபடியே பகல்போல நிலவுஎறித்த அந்த இரவில் மின்சார வெளிச்சங்களும், தேடொழியும் சேர்ந்து இரவைப்பகலாக்க, மண்அணைதாண்டி உட்சென்று அவள் எடுத்துவந்த வேவு அவள்மீது எல்லோருக்கும் அசையாத நம்பிக்கையைக் கொடுத்தது.

அவளது கடைசி நாட்களில் அவள் இலக்குக்குப் போகின்ற கடைசி நேரம்வரை அவளுக்குக் காய்ச்சல். இலக்குக்கான மாதிரிப் பயிற்சியையும் காய்ச்சலுடன்தான் செய்து முடித்தாள். விரைவாகத் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் நழுவிப்போய்விடுமோ என்ற ஆதங்கத்தில் தனது இயலாமையைக்கூட வெளிப்படுத்தாது இரவிரவாக கடுமையான மாதிரிப் பயிற்சிகளைச் செய்து முடித்த பின்பே தனது இலக்குக்குச் சென்றாள்.

"தற்செயலாய் இலக்கை அடையமுதல் அங்கே காயப்பட்டால் கூட, குறோஸ் இழுத்தாவது இலக்குக்குப் போவன்"

அதுதான் யாழினி சொல்லிவிட்டுச் சென்ற கடைசி வார்த்தை. அவளது இலக்கு, தான் மடிகின்ற இடம் தனது சொந்த ஊர்தான் என்பதில் அவளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்திருக்கும். அவளின் இலக்குக்கான நீண்டநேர நடைப்பயணத்தின் இறுதியாக அவளது உறவினர் வீட்டுக்கு அண்மையாகச் சென்றுகொண்டிருந்த நேரம் என்ன நினைத்தாளோ?

"ஒரு நிமிடம்"

என ஓடிச்சென்று தனது ஜீன்ஸ் பொக்கற்றினுள் வைத்திருந்த கடிதத்தை எடுத்து, வெறிச்சோடிப் போயிருந்த தனது வீட்டிற்குள் புகுந்தாள். சில நாட்களாகக் கிழிக்கப்படாதிருந்த கலண்டரினுள் வீட்டினருக்கான தனது இறுதிக்கடிதத்தை வைத்த கடைசி நிமிடத்தில், கூடச் சென்றவர்களின் விழிகள் ஈரத்தில் பளிச்சிட்டன.

அடுத்தநாள் வீடு பார்க்கச் சென்ற உறவினர்கள், கடிதத்தை எடுத்து அவளது தாயிடம் கொடுத்தார்களாம். கரைந்து போகின்ற அந்த இறுதி நிமிடங்களில் அவசரத்தில் கிறுக்கிச் சென்ற அவளது வார்த்தைகளில் அவளைத் தேடித்தேடி அவளது பெற்றோர் அழுதனர். அவள் போயே விட்டாள்.

1997.06.10 அன்று ஜெயசிக்குறுய் படையினரின் முதுகெலும்பு உடைக்கப்பட, அதில் இவள் பங்கும் பெரியதாக அமைந்தது. சண்டையின் முக்கியமான கட்டத்தில் அவளுக்குரிய கட்டளை கிடைக்க, சண்டைக்கெனச் சென்றிருந்த எல்லோரும் பார்த்திருக்க பெரிய தீப்பிழம்போடு மேஜர் யாழினியும் கப்டன் நிதனும் கப்டன் சாதுரியனும் சிதறிப் போனார்கள். தெறித்த தசைத் துணுக்குகளுடன் ஒருகணம் அதிர்ந்து குலுங்கிய சேமமடு மண்ணுக்குள், வீசுகின்ற மெல்லிய தென்றலுக்குள் எங்களின் தலைவர் கூறுகின்ற 'மொறாலுக்குரியவள்' போய்விட்டாள்.

**********

எங்கள் விடுதலைக்கான பயணத்தில் அவளது இழப்பு எவராலும் ஈடுசெய்ய முடியாத ஒன்று. ஒரு தனி மனிதப்பிறவி. போராளி என்பதை மீறி, தன்னை அர்ப்பணித்து அவள் ஆற்றிய பணி அதிகம். எத்தனையோ போராளிகள் கூட்டிணைந்து நடத்தும் தாக்குதல்களின் வெற்றிக்கு மூலவேர்களைத் தாங்கி நின்றவள் முகுந்தா. சாதாரண சம்பவங்களை அல்லாமல் தான் வாழ்ந்த கடைசி நிமிடம்வரை மறக்க முடியாத எத்தனையோ மெய்சிலிர்க்க வைக்கும் அனுபவங்களைச் சந்தித்து, அவற்றிலிருந்து விரிந்த புதிய சிந்தனைகளைக்கொண்டு மேலும் மேலும் கட்டியெழுப்பப்படவேண்டிய எங்கள் படையணியைப்பற்றி அடிக்கடி கனவு கண்டவள்.

விடுதலை நெருப்பைக் கண்ணினுள் எரியவிட்டு, கண்ணி வயல்களுக்குள்ளால் ஊர்ந்து தவழ்ந்து பனி, மழை, வெயில், பகல், இரவு பாராது அவள் எடுத்த வேவுத் தகவல்கள்தான் சமர்க்களங்களில் எமது தாக்குதலுக்கான மூலாதாரமாகியது.

தம்மால் செய்யமுடியாது என்று வேறு யாரும் கைவிட்ட வேலைகளை என்னால் முடியும். நான் செய்கிறேன் என்று முன்வந்து செய்து முடித்தபோது அவளுள் பிரகாசித்துக்கொண்டிருந்த ஆளுமையை எம்மால் இனம்காண முடிந்தது.

1990 இல் நடுப்பகுதியில் வல்வெட்டித்துறையிலிருந்த தனது குடும்பத்தை விட்டு, விடுதலைப் போராட்டப் பாதையில் முகுந்தாவும் வந்து சேர்ந்தாள். 1991இல் வேவுப் பயிற்சிக்கென விடுதலைப் புலிகள் மகளிர் படையணியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விபரத்தில் தனது பெயர் இல்லை என்பதைப் பார்த்துவிட்டு, ஆர்ப்பாட்டம் செய்து அடம்பிடித்து அந்தக்கடினமான பணியில் தன்னைச் சேர்த்துக்கொண்டாள். அன்றிலிருந்து தொடங்கிய வேலை அவள் இல்லாத சண்டைகளும் வேவுகளும் இல்லையென்று சொல்லுமளவுக்கு நீண்டிருந்தது. கட்டைக்காடு, பூநகரி, மண்டைதீவு, கொக்குத்தொடுவாய், வெற்றிலைக்கேணி, சூரியக்கதிர் 1-2, 1996இல் ஆனையிறவு-தட்டுவன்கொட்டி, முல்லைத்தீவு, சத்ஜெய என்று விரிந்துசென்ற சமர்க்களங்களில் எமது தாக்குதலுக்கு உயிர்நாடியாக அவளது வேவுத் தகவல்கள் இருந்தன. அவள் வேவுபார்த்த நடவடிக்கைகளில் சூரியக்கதிர்-2 சற்று வித்தியாசமானது. மக்களோடு மக்களாக யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிச் சென்றவர்களோடு சேலை கட்டி, தென்மராட்சி முகாமொன்றுக்குச் சென்று, இராணுவத்தினரிடம் நீர்வாங்கிக் குடித்து அங்கிருந்து ஆயுத தளபாடங்கள், நிலைகள் பற்றிய தகவல்களைக் கொண்டுவந்து சேர்த்ததுவரை தனியாகச் சென்ற துணிவு, எத்தகைய வேலையையும் இந்த மண்ணுக்காய் ஏற்றுச் செய்து முடிப்பாள் இவள் என்பதை நிரூபித்தது.



**லெப். கேணல் முகுந்தா**
கெங்கேஸ்வரி முத்துக்குமார்
ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை.
பிறப்பு: 1974-02-22
வீரச்சாவு: 1997-06-18



**லெப். கேணல் தாட்சாயினி**
கிளாறின் புளோரா மனுவேற்பிள்ளை
புலோப்பளை, பளை.
பிறப்பு:-1965-11-03
வீரச்சாவு:-1997-08-04

தானும் ஒரு கரும்புலியாகச் சென்று தனது அர்ப்பணிப்பின்மூலம் நிறையச் சாதிக்க வேண்டும் என்ற கனவு முகுந்தாவுள்ளும் விரிந்தது. 1994இல் அண்ணைக்குக் கடிதம் எழுதியபோது வேவுப்பணியையும் தான் அவ்வாறுதான் நினைக்கின்றேன் என்று அண்ணையிடம் இருந்து பதில் கிடைக்க, தொடர்ந்தும் தனது பணியில் முழுமூச்சாக முகுந்தா ஈடுபடத் தொடங்கி விட்டாள்.

தாக்குதலுக்குமுன் மாதக்கணக்காக வேவுபார்த்து சண்டைக்கு வழிகாட்டி, தாக்குதலில் பங்குபற்றி, விழுப்புண்ணேற்று அவை குணமடைய மீண்டும் வேவுக்குச் சென்று......... இப்படி ஒரு சுழற்சிமுறையில் மீண்டும் எமக்கருகில் அவள் வந்து விடுவாள். இவ்வளவுக்கு நடுவில் அவள் ஒரு குஷியான பேர்வழி. முகாமில் அவள் நிற்கிறாள் என்பது வாசலில் நிற்கும்போதே தெரிந்துவிடுமளவிற்குப் பெரிய தொண்டை. இதனால் "தொண்டா" என்றே எல்லோரும் அவளை கூப்பிடத் தொடங்கி விட்டனர்.

மரணப் பொறிக்குள் நின்று கொண்டு எந்தவித நெருக்கடிக்குள்ளும் குறித்த வேலையைச் செய்து முடிக்கும்

தொடர்ச்சி 13ம் பக்கம்......

# அனைத்துலக நாடுகளில்

## யேர்மனியில் .....

22-11-97 சனிக்கிழமையன்று யேர்மனியில், கேர்ன் நகரில் 'றிவிய' பூங்கா மண்டபத்தில் நடைபெற்ற




மாவீரர் நாள் நிகழ்வில், ஒன்பதினாயிரம் தமிழர்கள் ஒன்றுகூடி மாவீரர்களுக்கு நன்றியுடன் அமைதி வணக்கம் செலுத்தினர். குலைவாழைகள், குருத்தோலைத் தோரணங்கள், ஒளிவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மண்டப வாயிலில், மாவீரர் பற்றிய தேசியத் தலைவரின் சிந்தனை வரிகள் வரவேற்றன. மேடையிலே அமைக்கப்பட்டிருந்த மாவீரர் வணக்கப்பீடத்தில் மாவீரர் குடும்பத்தினரிடமிருந்து பெறப்பட்ட மாவீரர் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

தமிழீழத் தேசியக் கொடிப்பாடல் இசைக்கப்பட, யேர்மனிப் பணியகத் தென்மாநிலப் பிரதிநிதி சிறீரவி அவர்களால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டு, அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. கல்விப்பணிப் பொறுப்பாளர் நாகலிங்கம் அவர்களால் மாவீரர் வணக்கப்பீடத்திற்கு விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழம் இசைக்குழுவினரால் மாவீரர் துதி பாடப்பட, மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மாவீரர் திருவுருவப்படங்களுக்கு தீபமேற்றி ஆராதனை செய்தனர்.

தொடர்ந்து விடுதலை நடனங்களும், சிறுவர் பேச்சுக்களும் இடம் பெற்றன. 'விடுதலைக்குயிலிசை' என்ற இசைநிகழ்ச்சியை தமிழீழம் இசைக்குழுவினர் நடாத்தினர். விடுதலை நிகழ்ச்சித் தொகுப்பு பாகம்-3, மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி-97 ஆகிய ஒளித் தொகுப்புக்கள் வெளியீடு செய்யப் பட்டன. கலைஞர் சதீஷ் அரசரத்தினம் அவர்களால் உரு வாக்கப்பட்ட மாவீரர் நாள்-97 நினைவுச்சிற்பத்தை, உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் காங்கேய மூர்த்தி அவர்கள், சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்ட பழ. கருப்பையா (தமிழ்நாடு) அவர்க ளுக்கு வழங்கினர்.

"எந்தப் பலவீனங்களுமற்ற, உறு தியான தலைமை தமிழீழத்திற்குக் கிடைத்திருப்பதால் தமிழீழ மலர்வை யாராலும் தடுத்திட முடியாது" என்பதை திரு. பழ. கருப்பையா அவர்கள் தமது பேச்சில் உறுதிபடக்கூறினார்.

யேர்மனிப் பணியக கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் சிவநாதன் அவர்கள், "நமக்கெல்லாம் சொந்தமாக ஒரு நாட்டையே பெற்றுத்தர உயிரையே கொடுக்கத்துணிந்த எமது தமிழ்ப் படையை இன்று நாம் பலப்படுத்தல் மிகவும் அவசியம்" எனக்கூறியதுடன், அதற்கான பங்களிப்பின் அவசியத்தையும் அவசரத்தையும் வலியுறுத்தியதைத் தொடர்ந்து, பெருவாரியான தமிழ்மக்கள் பணமாகவும் தங்கநகைகளாகவும் தங்கள் பங்க ளிப்பைச் செய்தனர்.இறுதியாக, முல்லை ஜெயாவின் மாவீரர் உன்னதத்தை வெளிப்படுத்தும் நாடகமும் அமுதநதி சுதர்சனின் கவியாக்கத்திலும் கண்ணனின் இசையாக்கத்திலும் சாவித்திரி இமானுவலின் நடனவாக்கத்திலும் 'வெற்றி நிச்சயம்' என்ற நாட்டிய நாடகமும் சிறப்பாக இடம் பெற்றன. யேர்மனி, தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் ஆனந்தராஜா அவர்கள் தேசியக் கொடியை இறக்கி வைக்க மாவீரர் நாள் நிகழ்ச்சி தமிழீழ உணர்வுடன் சிறப்பாக நிறைவு பெற்றது.

## பிரான்சில் .....

தமிழீழத் தேசிய மாவீரர் நாள், பிரான்சில் பாரில், செவ்றோன், முல்லவுஸ், ஸ்ராஸ்புறுக் ஆகிய நகரங்களில் மாவீரர் நாள் நிகழ்வுகள் புலம் பெயர் தமிழர்களால், எமது மண்ணின் மைந்தர்களை நினைவுகூர்ந்து நடாத்தப்பட்டன.

கடந்த 30ஆம் திகதி பாரிசில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் கலந்து கொண்டு, மாவீரர்களை நினைவுகூர்ந்தனர். இந்நிகழ்வில் பலவிதமான கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழீழ எழுச்சிப் பாடல்கள் 'எழுச்சி கானங்கள்' எனும் தலைப்புடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. தொடர்ந்து கலைப் பள்ளி மாணவர்களின் நடனங்களும், வில்லுப்பாட்டு, நாடகம் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.



1997ஆம் ஆண்டு மாவீரர் நினைவாக நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, பாட்டுப் போட்டி ஆகியவற்றில் பங்குபற்றி வெற்றியீட்டியோர்களுக்கு தங்கப் பதக்கமும் பரிசுகளும் வழங்கப் பட்டன. மாவீரர் நினைவு நாள் நிகழ்வின் சிறப்புப் பேச்சாளராக தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த திரு. பழ. கருப்பையா அவர்கள் கலந்து கொண்டார். அத்துடன் சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகளின் அனைத் துலகப் பணியகப் பொறுப்பாளர் திரு. வே. மனோகரன் அவர்கள் கலந்து கொண்டார்.

என்றுமில்லாதவாறு இம்முறை நிகழ்ந்த மாவீரர் நினைவு கூர்தலுக்கு பெருமளவு மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிட த்தக்கது.

இதேபோல, கடந்த 23ஆம் திகதி செவ்றோனில் நடந்த மாவீரர் நாள் நிகழ்விலும் பல கலை நிகழ்ச்சிகள் மண்டபம் நிறைந்த மக்களுடன் மிகச் சிறப்புடன் நடைபெற்றது.

தொடர்ந்து, 20-12-97 இல் லியோன் நகரிலும் மாவீரர் நாள் அந்நகரில் வாழும் தமிழ் மக்களால் மிகவும் சிறப்பாக நடாத்தப்படவுள்ளமை குறிப்பிட த்தக்கது. ✷

## லண்டனில் .....

லண்டனில் 29-11-97 இல் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் மாவீரர் தூபியின் முன் மலர் தூவி மக்கள் அஞ்சலி செய்த காட்சி, மிக உணர்வுபூர்வமாகவிருந்தது. ஆரம்ப நிகழ்வாக, தமிழீழ விடுதலைப் போரில் களப்பலியான மாவீரர்களுக்கும் மக்களுக்குமாக அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, புலவர் சிவநாதன் அவர்கள், தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அடுத்து, மாவீரர்களின் பிரித்தானியா வாழ் குடும்பத்தினர் மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி வைக்க, மண்டபத்தில் நிறைந்திருந்த 1800 க்கும்



மேற்பட்ட தேச பக்தர்கள் அனைவரும் கைகளில் தீபங்கள் ஏந்தி மாவீரர்களுக்கு தீபவணக்கம் செய்தனர். இதனையடுத்து, தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் மாவீரர் நாள்-97 உரை ஒலிபரப்பப்பட்டது.

கலை நிகழ்வின் முதல் அங்கமாக, ஸ்கொட்டிஸ் வாத்திய இசைக்கலைஞர் திரு. இயன் கீர் அவர்களால் விடுதலைப் பாடல்கள் இசைக்கப்பட்டபோது, மக்கள் எழுந்து நின்று கரகோசம் செய்து கலைஞரை கௌரவித்தனர். அதனைத் தொடர்ந்து, 'குறத்தி இவள் சொல்லும்' என்ற பாடலுக்கு ஆசிரியை திருமதி ரஜனி சுரேஸ்குமாரின் மாணவிகள் அளித்த நடனமும், மாவீரர் நினைவாக ஆசிரியை திருமதி ராகினி ராஜகோபால் தன் மாணவிகளுடன் இணைந்து அளித்த 'ஈழத்தமிழா இன்னும் உறக்கமா' என்ற பாடலுக்கான நடனமும் பாராட்டுதல்களைப் பெற்றன. சங்கீத வித்துவான் திருமதி செந்தில்செல்வி வாமானந்தனின் மாணவிகளின் வீணை இசை சிறப்பாய மைந்தது. விடுதலைப் புலிகளின் பிரத்தானியப் பிரதிநிதி தனது உரையில், எதிர்வரும் 98ஆம் ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதி லண்டனில் நடைபெறவுள்ள, சிறிலங்காவின் 50 ஆண்டுகால அடக்கு முறைக்கு எதிரான எழுச்சிப் பேரணியில் 10,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் தெளிவு படுத்தினார்.

அடுத்ததாக, இளங்கலைஞர் செல்வன் யூட் யேசுதாசனின் இசையுடன் நடைபெற்ற எழுச்சிப்பாடல்கள் நிகழ்வில், சிறுமி கிருஷ்ணி ரமேஷின் பாடல் யாவரையும் கலையின் பத்தில் மூழ்க வைத்தது.

இறுதி நிகழ்வான நாடகத்தில், திரு. எஸ். ஞானவேல் அவர்களுடன் திறம்பட நடித்த நடிகர்களின் கூட்டு முயற்சியால், கடற்கரும்புலி காந்தரூபனின் வாழ்க்கைச் சுருக்கத்தை கலை வடிவமாகக் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

இறுதியாக, தமிழீழத் தேசியக் கொடி இறக்கப்பட்டு மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவு செய்யப்பட்டது. ✷

## பின்லாந்தில் .....

ஸ்காண்டிநேவிய நாடுகளில் ஒன்றான பின்லாந்தில் 26-11-97 வியாழக்கிழமையன்று, தமிழீழத் தேசிய மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வு அங்கு வாழும் தமிழ் மக்களால் மிக எளிமையாக நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் ஈகைச்சுடரேற்றி, மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தினர். தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்காக எமது மாவீரர்கள் செய்த அர்ப்பணிப்புக்கள் எடுத்துரைக்கப்பட்டன.



# மாவீரர் நாள் - 1997

## அவுஸ்திரேலியா சிட்னியில் .....

சிட்னியில், தமிழர் ஒருங்கிணைப்புக் குழு சிட்னிக் கிளையினரால் 29.11.97 சனிக்கிழமை, மாவீரர் நாள் மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டது. இந்தியப் படையுடன் நடந்த மோதலில் வீரச்சாவடைந்த மாவீரன் 2ஆம் லெப். நவாசின் (பழனிவேல். நவீந்திரன்) தாயார் திருமதி. வள்ளிக்கொடி பழனிவேல் அவர்கள் சுடரேற்றி வைக்க நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அவுஸ்திரேலியப் பொறுப்பாளர் திரு. தி. ஜெயக்குமார் அவர்கள், தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

அதனையடுத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த பொதுமக்களுக்கும், வீரச்சாவடைந்த போராளிகளுக்கும் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அணிதிரண்டு, தாயக விடுதலைக்காக தமது இளமை, இன்னுயிரை அர்ப்பணம் செய்த மாவீரர்களுக்கு மலர், தீப அஞ்சலி செய்தனர். மலேசியாவிலிருந்து வருகை தந்த வழக்கறிஞர் பசுபதி அவர்கள் தீபமேற்றி கலை நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார். தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் மாவீரர் தின உரை ஒலிபரப்பப்பட்டது.

செல்வி. அபிராமி ஜெகதீஸ்வரன் மாவீரரின் சிறப்புப்பற்றி உரையாற்றினார். செல்வி. யதுகிரி லோகதாசன் ஆங்கிலத்தில் உரையாற்றினார். விடுதலை வேள்வி என்ற நாட்டிய நாடகமும் இடம் பெற்றது. திரு. கு. கௌதமன் கவிதை வாசித்தார். தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்த சிலம்பொலி செல்லப்பன் அவர்களும், மலேசியாவிலிருந்து வருகைதந்த திரு. திருமாவளவன் அவர்களும், வைத்திய கலாநிதி பாரி அவர்களும் சிறப்புரையாற்றினர். போர்க்காலப் பாடல்கள் மெல்லிசை, புல்லாங்குழலிசை நிகழ்ச்சி நடைபெற்றது. சிட்னி தமிழர் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் "மாவீரர் யாரோ என்றால்" என்ற நாடகமும், மெல்பேண் தமிழர் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் "சோலையம்மா" என்ற நாடகமும் மேடையேற்றப்பட்டது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அவுஸ்திரேலியப் பொறுப்பாளர் திரு. தி. ஜெயக்குமார் அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை இறக்கி வைத்து நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

## பேர்த்தில் .....

மேற்கு அவுஸ்திரேலியத் தலைநகர் பேர்த்தில் 06-12-97 அன்று தமிழீழத் தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகள், செல்வி. யாழ் திலீபாவின் வரவேற்புரையுடன் செல்விகள். விஜி, யோகா, ரேகா ஆகியோர் தமிழீழத் தேசிய கீதத்தைப் பாட ஆரம்பமாகியது. தொடர்ந்து மாவீரர் நினைவுப் பாடல் ஒலிக்க, தீபஒளிகள் ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. மாவீரர் வீரவணக்க உரையை, திரு. அரன் கந்தையா அவர்கள் நிகழ்த்தினார். திருமதிகள். தேவகி, ஜெயா ஆகியோர் "மாவீரர் புகழ்பாடுவோம்" என்ற பாடலால் மாவீரரை அர்ச்சித்து நின்றனர். தமிழீழத் தேசியத் தலைவரின் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் செய்தியும் ஒலிபரப்பப்பட்டது.

செல்விகள். பவித்ரா, அர்ச்சனா ஆகியோர் "சின்னச் சின்ன கூடுகட்டி" என்ற பாடல் மூலம் நடனாஞ்சலி செய்தனர். சிறுவன் பவா நிசாந்தன் ஆற்றிய உரை பெரும் பாராட்டுதலைப் பெற்றது. "கல்லறையில் விளக்கேற்றிப் பணிகின்றோம்" என்ற பாடல் ஆறுபேர் கொண்ட குழுவினரால் கண்ணீர் மல்கப் பாடப்பட்டது.

"அழிவினை அழிப்போம்" என்ற வீரமிகு நடனத்தை



செல்விகள். விஜி, யோகா, ரேகா ஆகியோரும் "முல்லை மலர்" என்ற நடனத்தை செல்விகள். அஞ்சலா, அஜந்தி, ராதா, வானதி ஆகியோரும் "எண்ணக் குதிரையில்" நடனத்தை செல்விகள். விஜி, யோகா, ரேகா, நிவி ஆகியோரும் வழங்கினர். மாவீரர் எழுச்சிப் பாடல்களும் பாடப்பட்டன. மாவீரர் வீரவணக்க உரையை திரு. மகிழ்நன் ஆற்றினார். மிகச் சிறப்பாக நடந்த இந்நிகழ்வில் என்றுமில்லாத அளவில் தமிழ் மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சுவிசில்....

மாவீரர் நாள் நிகழ்வுகள் 7-12-97 அன்று சுவிஸ் பேர்ண் மாநகரில் சிறப்பாக நடைபெற்றது. சுமார் 6,000க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில், தேசியக் கொடியை கப்டன் தாயகத்தின் தாயார் திருமதி பாலசுந்தரம் சரோஜினி அவர்கள் ஏற்றி வைக்க. ஈகைச் சுடரை 2ஆம் லெப். மாறனின் தந்தை திரு. ஐ. சிவநேசன் அவர்கள் ஏற்றி வைத்தார்.

விளக்குகள் யாவும் அணைக்கப்பட்டு பாடசாலை மாணவ மாணவியர், மாவீரர் குடும்பத்தினர், பொதுமக்கள் என்ற வரிசையில், திரு. திருப்பதி அவர்களின் கைவண்ணத்தில் அமைக்கப்பட்டிருந்த துயிலும் இல்லம் நோக்கி ஈகைச் சுடர்கள் எடுத்துச் செல்லப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது.

தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நாள் செய்தி ஒலிபரப்பப்பட்டதைத் தொடர்ந்து, செல்வன் தென்னவன் "நாளும் விடுதலை தீயில் குதித்திடும் நாயகன்" பற்றியதான தனது தெளிவான பேச்சில் சபையோரைக் கவர்ந்தான். கலாநிகேதன் நடனாலய மாணவிகளும், ராதா நடனாலய மாணவிகளும் முறையே எழுச்சி நடனமும் நாட்டிய நாடகமும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

பேர்ண் அன்னைபூபதி தமிழ் சிறுவர் பாடசாலை, 'லங்னோவ்' தமிழ் மாணவிகள், 'சுக்' பாரதி கல்வி நிலையம், 'ஜோனா' கலைக்கோவில் நடனாலய மாணவிகளின் நடனங்கள், நாட்டிய நாடகங்கள் என்பனவற்றுக்கிடையே நான்கு இசைத் தட்டுக்கள் வெளியிடப்பட்டன. தென்னிந்திய இசைக்கலைஞர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'புயல் அடித்த தேசம்' என்ற இசைத்தட்டும் வெளியிடப்பட்டது. இந் நான்கு இசைத் தட்டுக்களையும் லெப். முகுந்தினி அவர்களின் தந்தை திரு. க. யோகநாதன் அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு. பழ. கருப்பையா அவர்கள் தனது சிறப்புரையில், சந்திரிகாவின் "சமாதானத்திற்கான போர்" தனது நோக்கை அடையாதென்றும், இலட்சிய உறுதி கொண்ட விடுதலைப் புலிகளை வெல்வது இயலாத காரியம் என்றும் குறிப்பிட்டார்.

அனைத்துலக பணியகத்தைச் சேர்ந்த விடுதலைப் புலிகளின் பணியாளர் திரு. சிவநேசன் அவர்கள் தற்போது இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையில், "தமிழர்கள் வெற்றி பெறவேண்டும் – அவ்வெற்றியே எமது உரிமைகள் – உடமைகளைக் கட்டிக்காக்கும்" என்ற பொருள்பட நிதியின் அவசியம் பற்றி விளக்கம் கொடுத்தார். துயிலும் இல்லம், மேடையை அலங்கரித்த ஓவியம், மற்றும் கணனி வீடியோ போன்ற துறைகளில் தொடர்ந்து சேவையாற்றி வருவோருக்காக மாவீரர் நினைவுப்பரிசில்கள் வழங்கப்பட்டது. இப் பரிசில்களை வீரவேங்கை கதிர் அவர்களின் தந்தை திரு. ஞானகுருபரன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் மேடையில் மட்டும் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான சுவிஸ் பிராங்குகள் பணமாகவும், ஒரு தாய் தனது தாலி உட்பட பலர் தங்க நகைகளாகவும் வாரி வழங்கினர். இந் நிதிப் பங்களிப்பில் சுவிஸ், இத்தாலி, யூகோஸ்லாவியா நாட்டுப் பிரசைகளும் பங்கெடுத்தனர். இதைத் தவிர புங்குடுதீவு "மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம்" தாயகத்தில் அல்லலுறும் மக்களின் புனர்வாழ்வு நிதிக்காக ஏற்கனவே 14-11-97 பேர்ண் நகரில் நடைபெற்ற திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்களின் தமிழிசைக் கச்சேரி நிகழ்வில் வைத்து 64,400 சுவிஸ் பிராங்கும் மாவீரர் நாள் நிகழ்வில் வைத்து 13,600 சுவிஸ் பிராங்குமாக மொத்தம் 78,000 பிராங்குகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு. சண்முகநாதனிடம் கையளித்தது.

இறுதி நிகழ்வாக, திரு. அன்ரன் பொன்ராசா அவர்களின் சிறப்பான நெறிப்படுத்தலில் 'காணி நிலம் வேண்டும்' என்ற புராதன தமிழர் கலை வடிவமான கூத்து இடம்பெற்றது. இறுதியாக, தேசிய கொடி இறக்கலுடன் அனைத்து தமிழீழ மக்களும் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற பாடலைப் பாடி மாவீரர் நாள் நிகழ்வுகளை நிறைவு செய்தனர்.

தொகுப்பு: செல்வி ஆருத்திரா

## இத்தாலி - பியோமொந்தேயில்.....

இத்தாலி பியோமொந்தே மாகாணம் வாழ் தமிழ் மக்களால் 30-11-97 அன்று தமிழீழத் தேசிய மாவீரர் நாள் நிகழ்வு நடாத்தப்பட்டது.

விழாவின் தொடக்கமாக ஈகச் சுடரேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. மாவீரர் ஈகச் சுடர்களை, மாவீரர் கப்டன் ரூபனின் சகோதரியும் மாவீரர் வீரவேங்கை வில்சனின் தாயாரும் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து மண்ணுக்காக மக்கள் அனுபவிக்கும் துன்ப வாழ்க்கையையும் அதனை நிவர்த்தி செய்யும் வழிவகைமினையும் சித்தரிக்கும் முகமாக "தீர்வோ தீர்வு" என்ற நாடகம் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பியோமொந்தே தமிழ் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் சுதந்திரத்துக்குப் பின் இலங்கையின் அரசியல் வரலாற்றுத் திருப்பங்களையும் அதன் விளைவாக தமிழின மக்களிடையே உணர்ச்சிபூர்வமாகக் கிளர்ந்தெழுந்த புரட்சி வடிவத்தினையும் படம்பிடித்துக் காட்டும் வகையில் "நாம் பட்ட துயர்" எனும் வில்லிசை வழங்கப்பட்டது.

இறுதியாக, 1997 ஆண்டு மாவீரர் நாள்



மரணித்த மாவீரரின் தியாகத்தை உள்ளம் உருக நினைவுகூர்ந்து அமைதி வணக்கம் செய்யப்பட்டு, மாவீரர் பாடல் இசைக்கப்பட்டது. சகல தமிழ் மக்களும் உணர்ச்சிபூர்வமாக மாவீரரை மலர்களால் அர்ச்சித்தனர்.

இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக, தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் தேசிய மாவீரர் நாள்– 97 ஆம் ஆண்டுக்கான உரை ஒலிபரப்பப்பட்டது. இவ் விழாவில் பேச்சுக்கள், பாடல்கள், கவிதைகள் என்பன இடம்பெற்றன. தொடர்ந்து, விக்னேஸ்வரர் தமிழ்ப் பாடசாலை மாணவர்களால் தமிழீழத்தில் தமிழ் ஞாபகார்த்தமாக, எமது மூத்த பரம்பரையினரின் வாழ்க்கை மரபினையும் பாரம்பரியத்தையும் நினைவுகூறும் வகையில், வர்ண ஓவிய நூல்கள் தமிழ்ப் பள்ளிச் சிறார்களுக்கு வழங்கப்பட்டது.

✳

## நாப்போலியில் ...

23-11-97 அன்று இத்தாலி நாப்பொலி நகரில் தமிழீழ தேசிய மாவீரர் நாள் சிறப்பாக நினைவு கூரப்பட்டது. மாலை 4.30 மணிக்கு மாவீரர் நினைவுக்

தொடர்ச்சி மறுபக்கம்......

## அனைத்துலக நாடுகளில் மாவீரர்...

கீதத்துடன் ஈகைச் சுடரேற்றல் நிகழ்வுடன் விழா ஆரம்பமானது. மாவீரர் பற்றிய உரையை தனது பிஞ்சுக் குரலால் செல்வன் பாபியோ இராசரட்ணம் வழங்கினார். அதனைத் தொடர்ந்து நாப்பொலி வாழ் தமிழீழ இசைக் கலைஞர்கள் 'எழுச்சி கானங்கள்' வழங்கினர்.

எழுச்சிப் பாடல் இரண்டிற்கு



மாலதி கலைப்பள்ளி மாணவியர் அபிநயம் வழங்கினர். அத்துடன் முதன்மை மாணவிகளில் ஒருவரான செல்வி கெலன்ரா இரு பாடலுக்கு அபிநயம் வழங்கினார். வானதியின் கவிதையினை செல்வி பாமினி வழங்கினார். தொடர்ந்து இரண்டு பாடல்களுக்கு எமிலியா றொமானியா தமிழ் சங்கத்தினர் அபிநயம் வழங்கினர். இதனை மாலதி கலைப்பள்ளி பழைய மாணவியும் முதன்மை மாணவிகளில் ஒருவரான செல்வி உசாந்தினி நெறியாள்கை செய்தார். நாப்பொலி அன்னைபூபதி பாடசாலை மாணவி செல்வி சாலினி கனகரட்ணம் 'மலரத் துடிக்கும் மொட்டுகள்" என்ற பாடலுக்கு அபிநயம் வழங்கினார். இவ் அபிநயத்தை திருமதி கெங்கா பீலிக்ஸ் பயிற்றுவித்திருந்தார். கலை, பண்பாட்டுக் கழக கலைஞர்களும் அபிநய நடனம் வழங்கியிருந்தனர். இவ் அபிநய நடனங்கள் யாவும் மக்களின் பெரும் வரவேற்பை பெற்றமையை அவர்களின் கரகோசம் உணர்த்தியது.

இதனைத் தொடர்ந்து இத்தாலிக் கிளை விடுதலைப் புலிகளின் பிரதிநிதி திரு. து. மேதா அவர்கள் சிறப்புரை வழங்கினார். மாவீரர் ஏன் போற்றப்பட வேண்டியவர்கள் என்ற விளக்கமும், புலம் பெயர் வாழ் தமிழர்களின் தேசக் கடமையையும் சிறப்பாக எடுத்து விளக்கினார். அத்துடன், நாப்பொலி நகரில் சில நூற்றுக்கணக்கான தமிழ் மக்களே வாழுகின்றபோதும், இவ் மாவீரர் நிகழ்வை சிறப்பாக நடாத்துவதையிட்டு தமிழர்கள் நாம் பெருமை கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், புலம்பெயர் வாழ் தமிழர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் விடுத்த செய்தியையும் தேவையையும் எதிர்பார்ப்பையும் அவர் எடுத்துரைத்தார். இவரின் பேச்சைத் தொடர்ந்து கலந்து கொண்ட மக்கள் பெறுமதிமிக்க பங்களிப்பைச் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து, நாப்பொலி தமிழ் கலைஞர்கள் 'வெற்றி நிச்சயம்' என்ற நாடகத்தை வழங்கினர். வன்னியில் சிங்களப் படையால் பெரும் ஆரவாரத்துடன் தொடங்கிய 'வெற்றி நிச்சயம்' இராணுவ நடவடிக்கை இறுதியில் தமிழர்களுக்கே இட்டபெயராக அமையப் போகின்றது என்பதை தெரிவித்து நின்றது.

அடுத்து "ஆத்மாவின் ராகங்கள்" என்ற நாடகம் இரண்டாவது தடவையாக மேடை யேற்றப் பட்டது. இவ் இரண்டு நாடகங்களும் உறங்கிக் கிடக்கும் உள்ளங்களையும் தட்டி எழுப்பி உணர்வை ஏற்படுத்தி விட்டுச் சென்றன. இறுதியாக 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' பாடலுடன் தேசிய மாவீரர் நாள் நிறைவடைந்தது.

## பலெர்மோவில்...

16.11.97 இல் இத்தாலி பலெர்மோவில் மாவீரர் நாள் நிகழ்வுகள், இத்தாலி கிளைப் பிரதிநிதி த. மேதா அவர்களின் தேசியக் கொடியேற்றத்துடன், மாவீரர் சுடர் ஏற்றி அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு ஆரம்பமாகின.

மாவீரர் புகழினைப் பாடும் "எழுச்சி கானங்கள்" கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் இசைக்கப்பட்டது.

மாவீரர் உரை பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் உரைகள் இடம் பெற்றதுடன், பரிசில்களும் வழங்கப்பட்டன.

வேவுப்புலிகளைச் சார்ந்த மாவீரர்களுக்குச் சமர்ப்பணமாக "மாலதி கலைப்பள்ளி, திலீபன் கல்வி நிலைய மாணவர்கள் "வேவுப்புலிகள்" நாட்டிய நடனத்தை வழங்கினர். மாலதி கலைப்பள்ளி மாணவிகள் "வெட்டி வீழ்த்துவோம்", "விண் மீதிலே ஒளி வீசும் தாமரைகள்" பாடல்களுக்கு அபிநயம் செய்தனர். செல்வி. கெலன்ரா மனோகரதாஸ் தனது தனி அபிநய நடனமூலம் "இனத்தின் அடிமை" பாடலுக்கு அபிநயம் வழங்கினார். திரு. மேதா அவர்கள் தனது உரையில், யுத்த நடவடிக்கைகளை முறியடிக்க புலம்பெயர் வாழ் தமிழர் தமது தொடர்ச்சியான பங்களிப்பை நல்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். இத்தாலியரான செல்வி. பிரான்சிஸ்காவும் உரையாற்றினார். மாவீரர் பற்றியும் தேசியத் தலைவர் பற்றியும் திரு. து. சிவபாலன், செல்வன் லெனின் ஆகியோர் கவிதை பாடினர். இறுதியாக கலை, பண்பாட்டுக் கழகத்தினர், "ஆத்மாக்களின் ராகங்கள்" என்ற நாடகத்தை வழங்கினர். மாவீரர் துயிலும் இல்லத்தை சிங்கள இராணுவம் தகர்த்தெறிந்த பின்பும் எமது மக்கள் எத்தகைய விடுதலை உணர்வுடன் வாழ்கின்றார்கள் என்பதை கதாசிரியர் ரஞ்சித் அவர்கள் மிகச் சிறப்பாக எடுத்தியம்பியிருந்தார்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து, "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற பாடலுடன் தேசியக் கொடி இறக்கப்பட்டு தேசிய மாவீரர் நாள் இனிதே நிறைவு செய்யப்பட்டது. விழாவில் 800 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ✷

# உரக்கக் கத்துவதால் உண்மைகள் மறையாது

சந்திரிகா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. யாழ் குடாநாட்டில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனதாகக் கருதப்பட்ட 600க்கும் அதிகமான தமிழ் இளைஞர், யுவதிகள் சித்திரவதையின் போது மரணமாகியோ அன்றி கொல்லப்பட்டோ இருக்கலாம் எனவும் அது தெரிவித்துள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபையின் இக்குற்றச்சாட்டை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்தது. எவ்வாறுதான் மறுத்துரைக்க முனைந்தாலும் இக்குற்றச்சாட்டில் இருந்து சிறிலங்கா அரசாங்கம் விடுபடமுடியாது. ஏனெனில் சர்வதேச மன்னிப்புச்சபை விசாரணைகள், ஆதாரங்கள் எதுவுமின்றி இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது. இந்த ரீதியில் இதுவரை காலமும் சந்திரிகா அரசாங்கம் மனித உரிமை ரீதியில் போட்டிருந்த முகமூடியை சர்வதேச மன்னிப்புச்சபை கிழித்தெறிந்துள்ளது என்றே கூறலாம். இல்லாவிடில் இதனைச் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கை பாரபட்சமானது, சரியாகப் பரிசீலனை செய்யாது வெளியிடப்பட்டது எனத் தெரிவித்து இருக்கமாட்டார். அமைச்சர் கதிர்காமரோ அன்றி சிறிலங்கா அரசோ உரக்கக் கத்துவதால் உண்மைகளை நீண்டகாலம் வெளிவராது தடுத்துவிட முடியாது. இந்த ரீதியில் இக்குற்றச்சாட்டானது, ஆதாரமற்றதாகவோ பரிசீலிக்கப்படாததாகவோ இருக்க வாய்ப்பில்லை. இதேசமயம், சிறிலங்கா அரசாங்கம் மறுப்புத் தெரிவிப்பதும் அதிர்ச்சி அளிக்கக் கூடிய ஒரு விடயமல்ல.

**யாழ் குடாநாட்டில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனதாகக் கருதப்பட்ட 600க்கும் அதிகமான தமிழ் இளைஞர், யுவதிகள் சித்திரவதையின் போது மரணமாகியோ அன்றி கொல்லப்பட்டோ இருக்கலாம் எனவும் அது தெரிவித்துள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபையின் இக்குற்றச்சாட்டை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்தது. எவ்வாறுதான் மறுத்துரைக்க முனைந்தாலும் இக்குற்றச்சாட்டில் இருந்து சிறிலங்கா அரசாங்கம் விடுபடமுடியாது. ஏனெனில் சர்வதேச மன்னிப்புச்சபை விசாரணைகள், ஆதாரங்கள் எதுவுமின்றி இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது.**

ஏனெனில், பகிரங்கமாக நடந்த படுகொலைகளையும் இன அழிப்பையும் மேற்கொண்ட தமக்கும் அதற்கும் தொடர்பு இல்லையென மறுக்கும் இவரின் அரசாங்கம், திரை மறைவில் இடம்பெற்ற இப்படுகொலைகளை ஏற்றுக் கொள்ளும் என்றோ அதற்காக மனம் வருந்தும் என்றோ எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? ஆனால், அரசாங்கம் என்னதான் நிராகரித்தாலும் யாழ் குடாநாட்டில் காணாமல் போனவர் பற்றிய தகவல்களை அரசினால் மறைத்துவிட முடியாது. ஏனெனில், இராணுவத்தினரால் கைதாகிய இவ் 600 பேருக்கும் பதில்கூற வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்குண்டு. அதிலும் யாழ் குடாநாடு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னரே இவ் இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டனர். இந்த வகையில் அரசாங்கமே இவர்களுக்கு என்ன நடந்தது, இவர்கள் எங்கே என்று கூறுவதற்குக் கடமைப்பாடு உடையதாகும். இது இவ்வாறிருக்க, சிறிலங்கா அரசு மீது பெரும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவிப்பதற்குச் சற்றுக்காலத்துக்கு முன்னதாக, விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இணைத்துவிட்டு சிறிலங்கா அரசுக்கு ஒத்தாசையாக இனப்பிரச்சினை விவகாரத்துக்கு இராணுவத்தீர்வுகாணும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது. அதாவது, உலகில் இன்று ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் உரக்கப்பேசும் அமெரிக்கா, சர்வதேச மன்னிப்புச்சபையின் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியுள்ள ஒரு அரசுக்கு இராணுவ உதவியுட்பட பல

**உலகில் இன்று ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் உரக்கப்பேசும் அமெரிக்கா, சர்வதேச மன்னிப்புச்சபையின் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியுள்ள ஒரு அரசுக்கு இராணுவ உதவியுட்பட பல உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளமை, அமெரிக்காவின் பேச்சுக்கும் நடவடிக்கைக்கும் இடையில் உள்ள வேறுபாடு குறித்து பலத்த கேள்விகளை எழுப்புவதாக உள்ளது.**

உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளமை, அமெரிக்காவின் பேச்சுக்கும் நடவடிக்கைக்கும் இடையில் உள்ள வேறுபாடு குறித்து பலத்த கேள்விகளை எழுப்புவதாக உள்ளது. ஆனால், இதனை அமெரிக்கா புரிந்து கொள்ளாமலோ அன்றித் தெரிந்து கொள்ளாமலோ செய்ததாகக் கருதுவதற்கு இல்லை. ஆகையினால் சிங்களப் பேரினவாதத்திற்கு அமெரிக்கா வழங்கிவரும் உதவியானது, உலகில் மனித உரிமை மீறல்களுக்கு முன்னணி வகிக்கும் அரசுக்கு வழங்கும் உதவியாகவே இருக்கும். இந்நிலையில் சர்வதேச மன்னிப்புச்சபையின் குற்றச்சாட்டானது, சிறிலங்கா அரசின் சுயரூபத்தை மட்டுமல்ல, அமெரிக்காவின் சுயரூபத்தையும் வெளிக்காட்டுவதாகவே கருத இடமுண்டு. ✷

# சிறுகதை

நிலம் வெளுக்கவும் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். வாசலில் அம்மா 'முழுவியளம்' பார்த்து வழியனுப்பினாள். யாழ்ப்பாண நகரம் ஏழு மைல் தொலைவிலுள்ளது. எதிர்க்காற்றை வலித்துச் செல்ல வேண்டும். அங்கிருந்து, முதல் பஸ்சில்

மென்றார்கள். இவனைப்போல, அரச பேரூந்தைப் பார்த்துவிட்டு வந்த பலரும் ஏறிக்கொண்டனர்.

பஸ் புறப்பட எட்டேமுக்காலாயிற்று.

வின்சர் சந்தியில் இறங்க வேண்டியிருந்தது. இவன் ஒன்று என எண்ணிக்கொண்டான். சோதனைச் சாவடியில் அடையாள அட்டையைக் காட்டிவிட்டு, சற்றுத் தள்ளிப்போய் மற்றவர்களுடன் நின்றுகொண்டான். பஸ்




போனால்தான் பருத்தித்துறையிலிருந்து அன்றைக்கே திரும்ப முடியும்.

வீட்டிலிருந்து பிரதான வீதிக்கு ஏறும்பாதை மூடப்பட்டுவிட்டதால் வீடுகளுக்கிடையே ஏற்படுத்திய புதிய ஒற்றையடிப் பாதையாலேயே பயணங்கள். கிளியண்ணை வீட்டின் கேற்றைத் திறந்து கொண்டு இவன் போகும்போது தூக்கக் கலக்கத்துடன் மடியிலமர்ந்திருந்த அவரது மகன், பெயர்சொல்லி அழைத்தான். இவன் திரும்பிச் சிரித்துவிட்டுச் சென்றான்.

பிரதான வீதியிலேறி, தடையணையருகே வந்தபோது வரிசையில் நிறையப்பேர் காத்திருந்தனர். மரக்கறிச் சுமைகளும், வாழைக்குலைகளுமாக விவசாயிகள்தான் அதிகம்.

ஏழு மணிக்குப் பாதை திறக்கப்பட்டது. சைக்கிளை வேகமாக மிதித்தான். வீதியில் மெல்ல மெல்ல ஆட்கள் தலைகாட்டத் தொடங்கிருந்தனர். இராணுவ ரோந்து அணியொன்று இரு கரைகளாலும் சீரான இடைவெளியில் சென்று கொண்டிருந்தது. இடையில் எதிர்ப்பட்ட முகாம்களில் இறங்கி, சைக்கிளை உருட்டியபடி போய்ப் பின் ஏறிச்சென்றான்.

நகரத்து நுழைவாயில் தடையரணிலும் நிறையக் கூட்டமிருந்தது. அரச **ஊழியர்** வரிசையிற்சென்றதால் விரைவாகவே சோதனையிடப்பட்டு உள்ளே அனுமதிக்கப்பட்டான். உள்ளேயும் பல இடங்களில் இறங்கி ஏறிச்செல்ல வேண்டியிருந்தது. பாதுகாப்பு நிலையமொன்றில் சைக்கிளை விட்டுவிட்டு, பஸ் நிலையத்திற்கு வந்தபோது, பஸ்ஸைத் தவறவிட்டிருந்தது தெரிந்தது. இரண்டு

வந்து எல்லோரையும் ஏற்றிப் புறப்படுகையில், கையைக் காட்டியபடி பெண்ணொருத்தி–அறுபது வயதிருக்கும்–அவசரமாக ஓடிவந்தாள். பருத்த உடலைத் தூக்கி அவள் ஓடிவருவது சுவாரஸ்யமாய்ப்பட்டது இவனுக்கு. யாரையோ திட்டியபடி ஏறிக்கொண்டாள்.

இவனுக்கருகே கைக்குழந்தையுடன் இருந்தவளைக் கண்டுவிட்டு அவளருகே வந்து, 'எடி கலாப் பெட்டை' என்றாள். அவள் சிரித்தபடி இவனுக்கும் தனக்கும் இடையில் இருத்தினாள். நேற்றுக் காலையில் வந்து சுவிஸிலிருக்கும் தனது மகனுடன் ரெலிபோன் **கதைக்கப்** பதிவு செய்துவிட்டு இரவெல்லாம் விழித்திருந்து காத்திருந்ததையும், 'கோல்' கிடைக்காததையும் அப்பெண் புலம்பித் தீர்த்தாள். அடிக்கடி 'கோதாரி விழுவான்கள்' எனத் திட்டினாள்.

அடுத்த சென்றியில் இறங்கினார்கள். அறுபது வயதுக்காரி திட்டியபடி இறங்காமலே இருந்தாள். இவன் இரண்டு என எண்ணிக்கொண்டான். சோதனை முடிந்து அப்பால் போய் நின்றபோது 'கொண்டக்ரர்' ஓடி வந்தான்.

"ஆற்றையப்பா அந்த உரப்பை?"

ஒருவர் தன்னுடையதுதானென்றார்.

"ஓடப்பா கெதியா........ **ஆமிக்காரன்** கேட்கிறான். கழட்டிக்காட்டு,"

மீண்டும் அனைவரும் ஏறிக்கொள்ள பஸ் புறப்பட்டது. கல்வியங்காட்டில் எல்லோரும் இறங்க வேண்டுமென்று றைவர் நச்சரித்தான். அறுபது அவனை ஏசியபடி இறங்கினாள். உரப்பைக்காரன் இம்முறை பையைச் சுமந்துகொண்டு

> பஸ் புறப்படும்போது இரண்டு இராணுவத்தினரும் ஏறி புட்போட்டில் நின்று கொண்டனர். இவனருகே இருந்தவளின் பிள்ளை அவர்களைப்பார்த்து வீரிட்டு அலறியது. அறுபது அவளிடமிருந்த குழந்தையை வாங்கி பலத்து "ஆராரோ" சொன்னாள். அது மேலும் அலறியது.

மணிநேரங்களித்தே அடுத்த பஸ். காலை உணவை முடிப்பதற்காக இவன் கடையொன்றுக்குள் நுழைந்தான்.

திரும்பி வந்தபோது மினிபஸ் ஒன்று நின்றது. எட்டரைக்குப் புறப்படு

வந்தான். பஸ் புறப்படும்போது இரண்டு இராணுவத்தினரும் ஏறி புட்போட்டில் நின்று கொண்டனர். இவனருகே இருந்தவளின் பிள்ளை அவர்களைப்பார்த்து வீரிட்டு அலறியது. அறுபது

அவளிடமிருந்த குழந்தையை வாங்கி பலத்து 'ஆராரோ' சொன்னாள். அது மேலும் அலறியது. மீண்டும் குழந்தை அவளிடம் போனது. இப்போது முதல் முறையாக அவள் இவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அடுத்த சென்றியில் இராணுவத்தினர் இறங்கிக் கொண்டனர். பெண்ணொருத்தி கையில் குழந்தையுடன் ஏறினாள். மறுகையில் ஒரு பையொன்றையும் வைத்திருந்து ஏறமுடியாமல் தத்தளித்து, தூக்கித் தருமாறு குரல் கொடுத்தாள். ஒருவன் பையைத் தூக்கி உதவினான். பின்னால் ஐந்து பிள்ளைகளும் ஏறிக்கொண்டனர். மூத்த பையன்–ஒன்பது வயதிருக்கும், ஒரு பெண்பிள்ளையைத் தூக்கி வைத்திருந்தான். ஓரிரு வயது இடைவெளிகளில் பிறந்த பிள்ளைகளா யிருக்கவேண்டும்.

இடமில்லாமல் தவித்தாள் அப்பெண். இவன் எழுந்தபோது, 'நீங்கள் இருங்கோ அவ இருந்திட்டா' என்றாள் இளம்பெண். பிள்ளைகளைக் கூப்பிட்டு பைகளையும் வைத்து அந்த இடம் முழுவதையும் அடைத்திருந்தாள் அப்பெண். பக்கத்தில் இருந்தவர் சினத்து ஏதோ சொல்லி ஏசினார். அவளும் பதிலுக்கு ஏதோ சொல்லிச் சமாளித்தாள். கொண்டக்ரர் காசு வாங்கினார்.

"என்ன அநியாயம்–சீ. ரி. பி யில போயிருக்கலாம்" என்றாள் பெண்.

'போயிருக்கலாந்தான்' என்றுவிட்டு தாள்க்காசை வாங்கி விரல்களுக்கிடையே புதைத்துக் கொண்டார்.

புத்தூர் கழிந்து இறங்கி ஏறியபோது, இவனது சீற்றை வேறொரு பெண் ஆக்கிரமித்திருந்தாள். இவனைப் பார்த்துவிட்டு, தெரியாதது போல வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். இளம் பெண் இவனை நோக்கி பரிதாபத்துடன் முறுவலித்தாள்.

வாகனம் பெரும்பாலும் நிறைந்துவிட்டது. இந்த நெருசலுக்கிடையேயும் ஏழெட்டுப்பேர் ஏற்றப்பட்டனர். அவர்களுடைய உடைகள் மங்கள நிகழ்வொன்றுக்குச் செல்வதைப் பறை சாற்றின. நேரே முன்சீற்றில் இன்னும் திருமணக்களை மாறாத இளங்குடும்பம் ஒன்று இருந்தது. இருவரும் கிறக்கத்துடன் ஒருவரை ஒருவர் நோக்கியும் சீண்டியும் கொண்டிருந்தனர். இவன் திரும்பி இளம் பெண்ணைப் பார்த்தான். நிமிர்ந்தவள் இவன் பார்ப்பதைக் கண்டுவிட்டு சிரித்தாள். பின் தலை குனிந்தாள்.

"எங்கே போட்டுவாறியள்?" இவன் கேட்டான்.

நிமிர்ந்து வினாக்குறியுடன் சிரித்தாள். இவன் மீண்டும் கேட்டான்.

"போனிலை கதைச்சிட்டு வாறன்"

"ஆரோடை.......?"

'அவரோடை'

'எந்த நாடு?

'ஜேர்மனியில் நிண்டவர், இப்ப போடர் கடந்து சுவிசுக்க போட்டாராம். அதாலை அவரோடை கதைக்க முடியேல்லை.

'இரவு எங்க தங்கினீங்கள்........?

'ரெலிபோன் கதைக்கிற இடத்திலைதான். நிறையப்பேர் இருந்தினை. நித்திரையுமில்லை. நுளம்புவேறை. பிள்ளையோடை சரியான கரைச்சல் பட்டிட்டன்.

இனி வீட்டைபோய்த்தான் எல்லாம்.

சிரித்தாள் அவள்.

வல்லையில் அடையாள அட்டைகளை இராணுவத்தினர் வாங்கிக் கொண்டனர். பதிலுக்கு சிங்களத்தில் எழுதப்பட்ட அட்டையொன்றைத் தந்தனர். மீண்டும் பயணம். சன நெரிசலில் வியர்த்துக்கொட்டியது. அந்த நேரம் பார்த்து "காற்று வாங்கப் போனேன் ஒரு கவிதை வாங்கி வந்தேன்" என்ற பாட்டைப்போட்டு எரிச்சலூட்டினான் றைவர். பிறகு தனக்குள் சிரித்துக் கொண்டான்.

மந்திகைக்கருகே ஏறி இறங்கும்போது இதுதான் கடைசி என்றான் கொண்டக்டர். இவன் பதினொன்று என எண்ணிக் கொண்டான். பருத்தித் துறையில் இறங்கி – வழக்கமான கடற்கரைப்பாதை மூடப்பட்டுள்ளதால் குச்சொழுங்கைகளால் வளைந்தும் நெளிந்தும் ஒரு மைல் தூரம் சென்று நுழைந்ததும் கொஞ்சந் தண்ணி தாங்கோ என்றான் ஆவலுடன், துக்கம் விசாரிக்காமலே.

சுக துக்க, விசாரிப்புக்கள், நாட்டு நிலைமை, அரசியல் எதிர்காலம் பற்றிய பகிர்வுகள் என ஒரு மணி நேரம் இருந்துவிட்டு, ஒன்றரை மணிக்குப் புறப்பட்டான்.

"ஒரு மணித்தியாலம் இருக்கவே வந்தனீர்" எனக் கனகண்ணை கேட்டார். இவன் பதிலேதும் சொல்லாமல் சிரித்துவிட்டுப் புறப்பட்டான்.

பருத்தித்துறையில் பஸ் ஏதுமில்லை. இப்போதுதான் பஸ் சென்றது எனக் கூறினார்கள். இவனைப் போலவே வேறுமிருவர் சோர்வு மேலிட நின்றனர். பக்கத்தில் ஒரு சிறு வான் நின்றது.



இவனைக் கண்டதும், 'அண்ணை யாழ்ப்பாணமோ?' என்றான் ஒருவன். அவன்தான் வானின் சொந்தக்காரனாய் இருக்கவேண்டும். இவன் தலையசைத்தான். "அண்ணையும் ஐம்பதுரூபா தருவார், அரை மணித்தியாலத்தால போவம்." ஐம்பது ரூபா என்றதும் இவன் ஏறவில்லை. அவன் பல்வேறு நியாயங்களைச் சொன்னான். விவாதப்பட்டுக் கொண்டிருந்தபோது, ஆபத்பாந்தவனாக ஒரு சீ. ரி. பி பஸ் வந்தது. இவனும் மற்றவர்களும் அதில் ஏறிக்கொண்டனர்.

இரண்டரை மணிக்கு பஸ் புறப்பட்டது. இடையிடையே பலரும் ஏறிக் கொண்டனர். பல்கலைக்கழகப் பிள்ளைகள்தான் அதிகம். வல்லை வெளியில் அட்டையைக் கொடுத்துவிட்டு அடையாள அட்டையை வாங்கிக் கொண்டான். ஆவரங்காலில் இராணுவத்தினர் சிலரும் ஏறிக்கொண்டனர்.

தொடர்ச்சி 12 ம் பக்கம்......

# இராணுவத்தின் இழப்பும் அரசின் திட்டமிட்ட இருட்டடிப்பும்

**வ**ன்னியில், 04-12-97 வியாழக்கிழமையன்று இடம்பெற்ற மோதலில் இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்களை அரசாங்கம் திட்டமிட்டு இருட்டடிப்புப் செய்துள்ளது. இம்மோதல் இடம்பெற்று 2 தினங்களின் பின்னர் கூட, இழப்புக் குறித்து தெளிவான அறிக்கை எதையும் அரசாங்கம் வெளியிடவில்லை. மோதல் நடந்த அன்று மாலை, மோதல் குறித்து பத்திரிகையாளர்களிடம் பிரஸ்தாபித்த பிரிகேடியர் சரத் முனசிங்க, மோதல்கள் தொடர்வதனால் இன்னமும் இழப்புக்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை என்றார். ஆனால், மோதல் ஓய்ந்து சரியாக 24 மணி நேரத்தின் பின்னரும் (வெள்ளிக்கிழமை மாலை) பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிடவில்லை. அன்று மாலை அரச கட்டுப்பாட்டில் உள்ள செய்தி ஸ்தாபனங்களின் தகவல்களின்படி, ஆயுதப் படைக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்த அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் என்பதாக இருந்தது. இறுதியாக மோதல் இடம்பெற்று 36 மணித்தியாலங்கள் கடந்துவிட்ட நிலையில்கூட, அதாவது சனி நண்பகல் வரை பாதுகாப்பு அமைச்சு இராணுவ இழப்புக்கள் குறித்து எந்தத் தகவல்களையும் வெளியிடவில்லை. களநிலவரத்துக்கு மாறாக, மாங்குளம் பகுதியில் இராணுவம் நிலைகொண்டுள்ளது போன்றதொரு கச்சிதத்தை உருவாக்கவே அது முனைந்தது. கள நிலபரங்களை இருட்டடிப்புச் செய்வதும் தமது விருப்பத்திற்கு ஏற்ப பிரச்சாரம் செய்வதும் சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து நீண்டகால வழக்கமாக உள்ளது. இதன் ஓர் அங்கமாகவே செய்தியாளர்களை யுத்தகளப் பகுதிக்குச் செல்வதற்கும் அரசாங்கம் தடை விதித்திருந்தது. மிக அபூர்வமாகச் செய்தியாளர்களை அனுமதித்தால் கூட, அதில் அவர்களின் சுதந்திரமான நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. அவ்வாறு இருந்தும் ரிவிரச நடவடிக்கையை யாழ் குடாநாட்டில் இராணுவம் ஆரம்பித்தபோது, பலத்த செய்தித் தணிக்கையை அரசாங்கம் மேற்கொண்டது. பல மாதங்களாக அச்செய்தித் தணிக்கை அமுலில் இருந்தது. ஆனால், ஜெயசிக்குறுய் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது செய்தித் தணிக்கையானது அமுலில் இருக்கவில்லை. ஆயினும் செய்தியாளர்களுக்கு யுத்த களப்பகுதிக்குச் செல்ல அனுமதி கிடைக்கவில்லை. ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் போது அரசாங்கம் இவ்வாறு நடந்து கொண்டமைக்கு ஜெயசிக்குறுய் நடவடிக்கையில் இராணுவம் இலகுவாக வெற்றியை ஈட்டிவிடும் என்ற நம்பிக்கை காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் தமது வெற்றிச் செய்திகளைப் பத்திரிகைகள் சுதந்திரமாகப் பிரசுரிக்கலாம் எனக் கருதியிருக்கலாம். ஏனெனில், முன்னைய இராணுவ நடவடிக்கைகள், களநிலபரம் தமக்குச் சாதகமாக இருக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை அரசுக்கு ஏற்படுத்தியிருந்தது. ஆனால், ஜெயசிக்குறுய் நடவடிக்கை அரசு எதிர்பார்த்த மாதிரி இலகுவாக இருக்காதது மட்டுமல்ல, அடிக்கடி பாதகமாகவும் மாறிக்கொண்டு இருந்தது. இந்நிலையானது, அரசுக்கு எதிராக விமர்சனங்களையும் ஓரளவு ஏற்படுத் தியிருந்தது. ஆகையினால், அரசாங்கத் தரப்புக்குப் பத்திரிகைகள் மீதும் குறிப்பாக பாதுகாப்புத்துறை செய்தி ஆய்வாளர்கள் மீதும் விசனத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தி இருந்தது. இந்த நிலை பத்திரிகையாளர்கள், செய்தி விமசகர்கள் இராணுவத்தின் தந்திரோபாய ங்களை முன்கூட்டியே வெளியிடுவ தாகவும் இதன்மூலம் விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாகவும் குற்றஞ் சாட்டும் நிலை வரைக்கும் சென்றது. ஆனால், அரசின் இக்குற்றச்சாட்டுக்கள் உண்மையில் மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் நடவடிக்கையே. உண்மையில் இந்நடவடிக்கையானது, தமது தவறு அல்லது தோல்வி என்பதற்கான பழியை மற்றவர்கள் தலையில் போட்டுவிடும் முயற்சியேயாகும். ஆனால், தற்போது நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

இராணுவத்தின் இழப்பை அரசால் வெளியில் கூறமுடியாத அளவுக்கு நிலைமை பாதகமாக உள்ளது. இந்த நிலையில் தகவலை இருட்டடிப்புச் செய்வதன் மூலமோ மீண்டும் செய்தித் தணிக்கையை அமுல்படுத்துவதன் மூலமோ நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என அரசாங்கம் கருதக்கூடும். ஆனால், இது எத்தனை தூரம் நன்மை பயக்கும் என்பது சந்தேகமே. ஏனெனில், மலிந்தவை எதுவும் சந்தைக்கு வந்துதானே ஆகவேண்டும். ✷

**ரிவிரச நடவடிக்கையை யாழ் குடாநாட்டில் இராணுவம் ஆரம்பித்தபோது, பலத்த செய்தித் தணிக்கையை அரசாங்கம் மேற்கொண்டது. பல மாதங்களாக அச்செய்தித் தணிக்கை அமுலில் இருந்தது. ஆனால், ஜெயசிக்குறுய் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது செய்தித் தணிக்கையானது அமுலில் இருக்கவில்லை. ஆயினும் செய்தியாளர்களுக்கு யுத்த களப்பகுதிக்குச் செல்ல அனுமதி கிடைக்கவில்லை. ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் போது அரசாங்கம் இவ்வாறு நடந்து கொண்டமைக்கு ஜெயசிக்குறுய் நடவடிக்கையில் இராணுவம் இலகுவாக வெற்றியை ஈட்டிவிடும் என்ற நம்பிக்கை காரணமாக இருந்திருக்கலாம்.**

**இராணுவத்தின் இழப்பை அரசால் வெளியில் கூறமுடியாத அளவுக்கு நிலைமை பாதகமாக உள்ளது. இந்த நிலையில் தகவலை இருட்டடிப்புச் செய்வதன் மூலமோ மீண்டும் செய்தித் தணிக்கையை அமுல்படுத்துவதன் மூலமோ நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என அரசாங்கம் கருதக்கூடும். ஆனால், இது எத்தனை தூரம் நன்மை பயக்கும் என்பது சந்தேகமே.**

## முடவன்....
### (சிறுகதை)

'டேய் சிறீ!' குரல் கேட்டு இவன் திரும்பிப் பார்த்தான். இவனோடு சிறு வகுப்பில் படித்த நண்பன், ஆவலோடு விசாரித்தான். இவன் அவனை அழைத்து அருகமர்த்தினான். அவன் சுவாரஸ்யமாய்க் கதைத்துக்கொண்டே வந்தான். திடீரென பஸ் கிறீச்சென பிரேக் போட்டு நின்றது. என்னவென இவனும் பலரும் பதைபதைப்புடன் பார்த்தனர். இராணுவத்தினரில் ஒருவரது தொப்பி கழன்றுவிழுந்து விட்டமை தெரிய வந்தது. "அட இதே," நண்பன் சலிப்புடன் சிரித்தான்.

யாழ்ப்பாணம் வந்து சேர ஐந்தே முக்காலாகி விட்டது. இந்நேரம் 'பண்ட்' மூடப்பட்டிருக்கும். இனி, பலாலி வீதி வழியாகவே செல்லவேண்டும். பார்க்கில் இவனது சைக்கிள் மட்டுமே நின்றது. கிழவன் இவனையே எதிர்பார்த்திருந்ததாகக் கூறினார். இவன் காசைக் கொடுத்துவிட்டு சைக்கிளேறி மிதித்தான். ஒரு நாள் பொழுது வீணாகிவிட்டதாக இவன் சலிப்புடன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

ஆரியகுளச் சந்தியைத் தாண்டும்போது, பெருமாள் கோயிலடிப் பக்கமாக வேட்டுச் சத்தங்கள் கேட்டன. சென்றிகளுக்குள் நின்ற படையினர் துப்பாக்கிகளுடன் வெளியே வந்து அங்குமிங்குமாக நிலையெடுத்தனர். அந்த வழியாகச் செல்லாததற்காகத் தன்னை மெச்சியபடி இவன் வேகமாகச் சைக்கிளைச் செலுத்தினான்.

வீட்டையடைந்தபோது நன்றாக இருட்டிவிட்டிருந்தது. வாசலில் அம்மா நின்றாள். "ஒரு இடத்துக்குப் போனா வேளைக்கு வாறேல்லையே: நானிஞ்சை நெஞ்சிடிச்சுக்கொண்டு நிக்கிறன்" என்று சொல்லி மேலும் ஏசினாள்? இவன் வெறுமையுடன் சிரித்தபடி சைக்கிளை நிறுத்தினான். சோர்வுடன் போய் குந்தில் அமர்ந்து கொண்டான். ✷

**யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு அம்மா வன்னியில் உள்ள தன் மகனுக்கு எழுதிய கடிதம்.**

அன்புள்ள மகனுக்கு,

**வ**ன்னிப் பகுதியில் உள்ள காடுகளில் மரநிழலில் கஞ்சியோ, கூழோ குடித்து விட்டு நிம்மதியாக நீங்கள் உறங்குகின்றீர்கள். ஆனால், நாங்கள் வீட்டில் இருந்தாலும் நிம்மதியாக உறங்க முடியாமல் அவல நிலையில் வாழ வேண்டியிருக்கின்றது. தாயின் அரவணைப்புக்கு கீழ் இருக்கும் குஞ்சுகளை கிராஞ்சிக் கொண்டு இரையாக்கும் பருந்துகள் போல் பெற்றோரின் பிடியில் இருந்து பெண் பிள்ளைகளையும், ஆண் பிள்ளைகளையும் கதறக் கதற இழுத்து செல்கிறார்கள்.

தேவையான அத்தியாவசியப் பொருட்களைப் பக்கத்திலுள்ள கடைகளுக்கு கூட சென்று வாங்க முடியவில்லை. வீட்டுப்படலையை திறக்க முடியாத அளவிற்கு இருக்கின்றது. ஐயோ என்று அவலக்குரல் எழுப்பினால் யாரும் கேட்க வருவதாயில்லை. நான் உயிருடன் இருந்தால் கண்டு கொள்ளுங்கள்.

அன்புடன்,

அம்மா.

**இரண்டாம் உலகப் போரில் யூத வதை முகாமில் காவல் இருந்த ஒரு ஜேர்மனிய நாஜி இளைஞன், தன் அம்மாவிற்கு அனுப்பிய கடிதம் இது.**

அன்புள்ள அம்மா,

**வி**டிகாலை ஐந்து மணிக்கு இந்தக் கடிதம் எழுதுகின்றேன். பட்டினியும் மரணபயமுமாய் என் வயது யூதக் கைதிகளை கல்லுடைக்க அனுப்பி விட்டு இப்போதுதான் உட்கார்ந்தேன்.

எல்லோரும் பாடிக்கொண்டே போனார்கள். அடித்து அடித்துச் சொல்லிக் கொடுத்த பாட்டு அடிமைச் சங்கீதம் அலாதி சுவைதான். இன்னொரு சுவாரசியம் – நேற்று மதியம் கால் வீங்கிய ஒரு கிழட்டு யூதனை, நிற்காமல் ஓடவைத்துப் பந்தயம். நான் சொன்ன முப்பதாம் சுற்றில் செத்து விழுந்தான். இரண்டு 'மார்க்' பணம் ஜெயித்தேன். இத்துடன் புகைப்படம் அனுப்பியுள்ளேன். கைக்குழந்தையோடு யூதப் பெண்ணை சுட்டுக்கொல்ல முன் எடுத்தது. குழந்தை கண்ணில் மிரட்சி பார்த்தாயா? முதுகுப் பக்கமிருந்து எடுத்ததால் அவள் முகபாவம் படத்தில் வரவில்லை. அடுத்த தடவை இன்னும் நல்லதாக அனுப்புகின்றேன். அப்புறம் வீட்டில் என்ன விஷேசம்? அப்பா கால்வலி குறைந்ததா? அவர் குளிரில் அதிகம் அலைய வேண்டாம். தங்கை லிண்டா பியானோ வகுப்புக்குப் போகிறாளா? அம்மா! உன் கையால் சாப்பிட்டு எத்தனை நாளானது? சீக்கிரம் திரும்ப வேண்டும்.

# நெஞ்சை விட்டகலா......

அவளது செயலாற்றலும் திறமையுமே இறுதி நாட்களில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புப் படையணி ஒன்றுக்கு பொறுப்பாளராக அவளை நியமிக்க வைத்தது. அந்தப் படையணியைத் திறம்பட வழிநடத்தி பெரியபெரிய விடயங்களையெல்லாம் பெண்போராளிகள் சாதிக்க வேண்டும் என்று தனது சின்னஞ்சிறிய இதயத்துக்குள் ஏராளமான கனவுகளைச் சுமந்து கொண்டிருந்தாள் அவள். 1997-06-18 அன்று அவளது துடிப்பு அடங்கிப்போன வேளையில் அந்தக்கனவு மொட்டுக்கள் முகையவிழ்த்து பூக்களா கியிருந்தன. அவற்றை அள்ளியெடுத்து எமது இதயங்களோடு இறுகத் தழுவிக்கொண்டு எம்மால் நிமிர்ந்து நிற்கமுடிந்ததே தவிர, கண்ணீர் சொரிய முடியவில்லை. ஆம் அவளுக்கும் அதுதான் விருப்பம். அவளது நினைவுகளை மீட்டுப் பார்க்கும் இந்தச் சிறிய பக்கத்தில் மட்டும், நாம் எழுதிய மொழியில் மட்டும் அடங்கி விடாது.

நீண்டு பரந்து எம்மில் வியாபித்து......

முகுந்தா மறந்துவிட முடியாத ஒருத்தி.

**********

கல்கியின் "பொன்னியின் செல்வனில்" வருவாரே ஒரு முதிய வீரர். பெரிய பழுவேட்டரையர் என்று அவருக்குப் பெயர். உடலில் அறுபத்து நான்கு வீரத்தழும்புகள் இருக்கிறதாம் அந்த வீரக்கிழவருக்கு. "எங்கள் தாட்சாயினியும் பெரிய பழுவேட்டரையரைப் போலத்தான்" என்றாள் தாட்சாயினியின் தோழி ஒருத்தி சற்றுப் பெருமையாக. உண்மைதான். தாட்சாயினியின் உடலிலுள்ள வீரத் தழும்புகளை நின்று நிதானமாக எண்ணினால் அறுபத்துநான்குக்கும் அதிகமாகவே இருக்கும்.

**தாட்சாயினி!**

அந்த வயதுக்கேயுரிய முதிர்ச்சி. களங்களில் அவள் காட்டிய உக்கிரம், தன்னோடு நிற்கும் போராளிகளில் வைத்திருக்கும் அன்பு, பராமரிப்பு, அவளது வளர்ப்பு, எல்லாவற்றுக்கும் மேலாக தவறு விடுகின்ற கணங்களில் அவளது தண்டிப்பு எல்லாமே ஒன்றாகச் சேர்ந்து இவளை எங்களுள் ஆளுமையுடையவளாக நிலைநிறுத்தியது.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணி சந்தித்த பெரும்பாலான சண்டைக்களங்களில் கம்பீரமாக ஒலித்த கட்டளைக் குரலுக்குரியவளை 1997-08-04 அன்று காலையின் பின் நெருப்பள்ளிவீசும் களம் இழந்திருந்தது. பல சண்டைக்களங்களில் உடல்நிறையக் காயங்களைப் பெற்றுவந்து, தப்பிப்பிழைத்து, இனிக் காயப்படுவதற்கே இடமில்லை என்ற நிலையில்கூட களத்தைவிட்டு போகமாட்டேன் என்று அடம்பிடிப்பவள்.

பலாலி காவல் நிலைகள், மணலாறுகளம், மண்டைதீவு, சூரியக்கதிர், பூநகரி, தொண்டைமானாறு-ஒட்டகப்புலம் வரையான காவலரண் அழிப்பு என்ற நீண்ட பட்டியல் அவளுக்குரியது. திறமையான சண்டைக்காரி. பூநகரிச் சண்டையில் அவளுக்கு இடுப்பிலும் தோள்மூட்டிலும் பெரியகாயம்.

"இந்தக்காயங்களோடு உங்களாலை தொடர்ந்தும் பயிற்சி எடுத்து சண்டைபிடிக்க ஏலாது: வெளி நிர்வாக வேலைகளைச் செய்யுங்கோ" என்று கூறப்பட்டும் கேளாமல், 'தன்னால் முடியும், தான் தொடர்ந்து சண்டையிலேயே நிற்பேன்' என்று விடாப்பிடியாய் நின்று செய்து காட்டியவள்.

மணலாறு மின்னல் சண்டையின்போது அவளுக்கு வயிற்றில் பெரியகாயம் ஏற்பட்டு, வெளிவந்து விழுந்த குடலை எடுத்து உள்ளே வைத்துப் பொத்தியபடி, இரத்தம் ஒழுக ஒருவரின் உதவியுமின்றி அரை மணித்தியாலம் நடந்தே மருத்துவ ஒழுங்குசெய்யும் இடத்துக்கு வந்து சேர்ந்தாள். அவளது மனஉறுதியைக்காட்ட இதைப்போல இன்னும் எத்தனையோ சம்பவங்கள்.........

ஓரளவு பதட்டமில்லாத காவல்நிலைப் பகுதிகளில் அவள் நிற்கும்போது அவள் அங்கு நடத்துகின்ற தடபுடலுக்குக் கணக்கில்லை. அதுவும் கடற்கரையோரக் காவல்நிலைப் பகுதியாயின் தாட்சாயினி நண்டு பிடித்து, வாய்க்கு ருசியாய் சமைத்துக் கொடுப்பாள். தனது குழுவிலுள்ள வயதில் சின்னப் போராளிகளுக்கு தானே உணவு குழைத்துக் கொடுப்பாள். ஒரு அம்மாவுக்குரிய பொறுமையும் பண்பும் கண்டிப்பும் அவளிடம் உண்டு.

ஆள் சரியான தேத்தண்ணிச்சாமி, விடாக்குடியன், மொடாக்குடியன் மாதிரி காலம் நேரமில்லாமல் தேநீர் தயாரித்து, தானும் குடித்து எல்லோருக்கும் கொடுப்பாள். தேனீயைப் போலவே அவளும் சரியான சுறுசுறுப்புத்தான்.

சூரியக்கதிர்-1இல் அவளுக்குப் பெரிய காயம். எறிகணை அவளின் காதோடு சேர்த்து கன்னத்தசைகளையும் பிய்த்துச் சென்றதோடு, மார்பிலும் பெரும் காயத்தை ஏற்படுத்தியது.

ஒருமுறை அவளது குழு ஒரு காவற்பகுதியில் நின்றது. அப்போது அவள் குழுவிலுள்ள ஒரு போராளிக்குக் காய்ச்சல். ஆறியும் ஆறாமலும் இருந்த வயிற்றுக்காயத்தைப் பொருட்படுத்தாது. தானே மரத்தில் ஏறி இளநீர் பிடுங்கிக் கொடுத்துவிட்டு, வயிற்றுநோவெடுக்க, ஒருவருமறியாது தனியாகப் போயிருந்து வயிற்றைப் பிடித்துக்கொண்டு அழுதாள்.

எப்போதும் இயக்கத்தின் நலன், கட்டுக்கோப்பு, எல்லாவற்றுக்கும் மேலாக எமது தலைவர் என்று தீவிரமான பற்று வைத்த போராளி. நாளும் பொழுதும் இதைப்பற்றியே சிந்தித்து, தனக்குக் கீழே உள்ளவர்களை வளர்த்தெடுத்த ஆற்றல் நிறைந்த போராளி. மிகத் திறமையான சண்டைக்காரி. அவளோடு நின்ற நாட்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு போராளிக்கும் உயிர்த்துடிப்பானவை. நெஞ்சை விட்டு அகலாதவை. ✷

---

# விலை!

**போ**ராட்டத்திற்குக் கவசமாய் இருந்த

ஏராளமான குடும்பங்களுள் அம்மாவினுடையதும் ஒன்று.

தென்மராட்சியின் மையமாய் உள்ள

மீசாலை ஊர்தான் அந்தக் குடும்பத்தின் மடி.

ஒன்றொன்றாக அம்மாவின் பிள்ளைகளில் மூவர்

இயக்கத்துக்குப் போய்விட்டனர். முதலில் போனவன் சேகர். மதுவன் அடுத்ததாகப் போனான்.

கேரதீவு இறங்கு துறையில் இந்திய வானூர்திகள்

பொழிந்த நெருப்பு மழையில் கண்களுக்கு முன்னால் கருகிப் போன அப்பாவைப் பறிகொடுத்து விட்டு, கதறிக் கொண்டு வந்தவன் அவன். நெஞ்சுக்குள் கனன்று கொண்டிருந்த அந்த நினைவோடேயேதான் மதுவன் புறப்பட்டுப் போனான்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு கான்சும் வெளிக்கிட்டுப் போய் விட்டான்.

அம்மாவுக்குத் துயர் இயக்கத் திற்குப் போனதற்காக

அல்ல, மூவரும் போய்விட்டதற்கு.

அம்மா தலைவருக்கு வேண்டு கோள் எழுதினாள்.

"தயவு செய்து மதுவனை மட்டும் என்னிடம்

அனுப்பி வையுங்கள்"

மதுவன் கடைசிப் பையன். பெற்றவர்களின்

அபரிமிதமான பாசம் அவன் மேல் இருந்தது.

வீட்டு வேலைகளிலெல்லாம் அம்மாவின் கையாள்

அவன் தான்.

அம்மா காத்திருந்த தலைவரின் பதிலோடு மூத்தவன்

சேகர் வீட்டுக்கு வந்த ஒரு மகிழ்வான இரவு. அந்தச் சந்தோசத்தில் அம்மாவுக்கு தூக்கமே வரவில்லை. அம்மாவுக்குச் சேதியைச் சொன்ன சேகர், இரவோடு இரவாகவே தம்பியைக் கூட்டிவர மணலாற்றுக்குப் பயணமானான்.

மறுநாள் - மணலாற்றில், ஒரு வழியாக அன்பு அண்ணையைத் தேடிப் பிடித்துச் சந்தித்து,



கடிதத்தைக் கொடுத்து கதைத்த போது - சண்டை ஒன்றிற்காக சற்று எட்டத்திற்குப் போய்விட்ட ஒரு தாக்குதலணியில் மதுவனும் போன தகவலைச் சொன்ன அன்பு அண்ணன், இரண்டு நாளில் அந்த அணி திரும்பிவிடும் என்றும் நின்று அவனை அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொண்டார்.

இரண்டு நாட்களாகத் தம்பிக்காகக் காத்திருந்தான் சேகர். முந்திரிகைக் குளம் என்ற ஊருக்குப் பக்கத்திலிருந்த இராணுவ மினிமுகாமைத் தாக்கி அழித்த அந்த அணி, இரண்டாம் நாள் திரும்பியது.

சேகர் ஆர்வத்துடன் தம்பியைத் தேடிய வேளை முகாமிலிருந்த எல்லோரும் அந்த வீரர்களைச் சூழ்ந்துகொண்ட பொழுது - வெற்றியோடு மீண்ட தோள்களில் மதுவன்......! அந்த வெற்றிக்கு விலையாகிப் போய்விட்ட மேஜர் சங்கர், முசோலினியுடன் 2ஆவது லெப். மதுவன்......!

சேகருக்குத் தலை வெடித்துச் சிதறியதைப் போலிருந்தது.

தம்பியைக் கூட்டிவரப் போன அண்ணன், தம்பியின் உடலைக் கொண்டு வந்தான்.

எல்லாம் முடிந்து விட்டது.

இதன் பிறகு - அடுத்தவன் 'கான்ஸ்' ஐ இயக்கம் அம்மாவிடம் அனுப்பி வைத்தது.

அவனுக்கோ வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. 'இனிமேல் தலைவருக்குக் கடிதம் எழுதக்கூடாது' என்று எச்சரித்து விட்டு, ஒரு நாள் மீண்டும் புறப்பட்டுப் போய் விட்டான்.

போனவன் - ஆனையிறவு படைத்தளத்திற்கான அரணியிலிருந்து அடிக்கடி வந்து, அம்மாவைப் பார்த்து விட்டுப் போனான்.

அம்மாவுக்கு உள்ளூரப் பயம் - "சண்டையில் நிற்கிறான் அவனுக்கும் ஏதாவது நடந்திட்டால்......"

ஒரு நாள் வீட்டுக்கு வந்தவன், அம்மாவுக்குச் செய்தியொன்றைச் சொன்னான் - "என்னை வேறு இடத்திற்கு மாத்திமிருக்கும் அம்மா. நாளைக்கு மட்டும் தான் ஆனையிறவில்- போகும் போது நாளைக்கு இங்கே வந்திட்டுப் போறேன்."

அம்மாவுக்கு ஆறுதல். இரவு நிம்மதியாக உறங்கிக் காலையில் எழுந்தாள்.

பின்னேரம் பிள்ளை வருவான். நல்ல சாப்பாடு செய்து கொடுக்க வேணும் - அம்மா ஆர்வத்தோடு சமையலறையில் மூழ்கிப் போனாள்.

மாலை வந்து இரவாகிய போதும் - பிள்ளை வரவில்லை. அம்மா காத்திருந்த போது அந்தச் செய்திதான் வந்தது.

அன்று காலை நடந்த சண்டை ஒன்றில் அம்மாவின் அந்த மைந்தனும்......

**கப்டன் கான்ஸ்**

அம்மாவின் உச்சந்தலையிலிருந்து நுனிக்காலுக்கு மின்சாரம் பாய்ந்தது !

**தி. இனியவன்**




பொல... பொலவென முதலைக்கண்ணீர் சொரிய
குளு..... குளு அறைகளில் தயாரித்த
நீலக்கட்சியின் போலித் தீர்வுப் பொதியில்
ஏமாறுவது சர்வதேசமாகக் கூட இருக்கட்டும்
நீ, மட்டும் உன் காதுகளை திறந்துவை
பத்தாயிரம் மாவீரர் துயிலும் இல்லங்களிலிருந்து
தமிழ் ஈழம் என்றே ஒலிக்கும் தாரக மந்திரம்
எப்போதும் கேட்டுக்கொண்டே இருக்கட்டும்!

**–கைலம்மான், பிரான்ஸ்.**

தமிழீழம் என்றே பாடுவோம்
கரங்களில் தீபம் ஏற்றுவோம்
மாவீரர் புகழ் கூறுவோம்
தாய்த் திருநாட்டை வணங்குவோம்
தமிழ்மொழி நாவில் பூசுவோம்
உள்ளத்தில் அச்சம் அகற்றுவோம்
தலைவரின் வழியில் செல்லுவோம்!

**–செல்வி திருஷ்ஜா திருநாவுக்கரசு, யேர்மனி.**

# தமிழீழம் என்றே.....!

சொத்திழந்தோம் சுகமிழந்தோம்
வீடிழந்தோம் நாடிழந்தோம்
உறவிழந்தோம் – மொத்தத்தில்
வாழ்விழந்தோம் – எதைமிழந்தபோதிலும்
விடுதலையை எட்டும்வரை – இறுதிக்கணம்
மண்ணில் வீழ்ந்து மடிகையிலும்
'தமிழீழம் என்றே'
மறவர் இனத்தின் உயிர் பிரியும்!

**–துன்னாலையூர்க் குகன், யேர்மனி.**

சங்கர், மாலதி நடந்த மண்
பல்லாயிரம் வேங்கைகள் தொடர்ந்த மண்
மில்லர் காவிய நாயகன் ஆனமண்
திலீபன் தியாகத் தீ வளர்த்த மண்
அங்கையற்கண்ணியும் தோன்றிய மண்
எது என்றால் அது தமிழீழம் என்றே
தரணிக்குக் கூறு!

**–த. செல்லம்மா, டென்மார்க்.**

உலகெல்லாம் அகதியாய் அலைந்தாலும்
ஊரிலும் அகதியாய் கிடந்தாலும்
நிலமெலாம் குருதியில் குளித்தாலும்
நம்மிடம் நம்பிக்கை ஒன்றே.....அது
பலவித பங்கையும் நாம் கொடுக்க
பாசறை வேங்கைகள் போர்தொடுக்க
புலர்ந்திடும் எங்களின் புதியபூமி
பூத்திடும் எமக்காய் தமிழீழம் என்றே!

**–அமலா ஜெயந்தன், யேர்மனி.**

தமிழீழம் என்றே சொல்லடா!
தரணியில் ஒரு நாடு நீ, வெல்லடா!
மாவீரர் தியாகம் எண்ணடா!
மானத் தமிழனாய் நீ, வாழடா!
தாய்போல் உன் தாய்நாடு எண்ணடா!
தமிழீழம் என்றே நீ, வாழடா!
தலைவன் வழி தன்னில் செல்லடா!
தமிழீழம் அதையும் நீ, வெல்லடா!

**–அ. சிவானந்தராஜ், லண்டன்.**

நவீன யுகம்வாழ்–தெள்ளெனத் தெறிக்கும் காளையே!
திரண்ட நின்தேகம், தினவெடுத்த தோள்கள்–
கணத்திற்குள் புதிதாய் சாதிக்கத் துடிக்கும்
வல்லமை கண்டு– உன்மேல் மருள்வேனே!
உந்தன் தாய்த்திருநாடு 'தமிழீழம் என்றே'
பணிசெய்தல் மறந்து நீ, வாழ்வாயே ஆமின்,
வெறும் சந்ததி பெருக தாங்கிடும் பிண்டமே
என்று நின் மேனிமேல் உமிழ்வேனே!

**–கேமராஜ், லண்டன்.**

தமிழீழம் என்றே நீ, பாடு
தமிழர் படையை ஒன்றியே ஓடு–பகைவன்
தரையெங்கும் விதைக்கிறான் கண்ணி–எம்
தலைமுறை முடமாக எண்ணி
தடைகளைப் போடுகிறான் எம்மேல்–நாம்
எடை குன்றிச் சருகாக மண்மேல்
தடை வெட்டும் படையுண்டு எம்மிடம்–அவர்
குடை நின்று பரணி பாடுவோம்.

**–ந. சந்திரகுமார், சுவிஸ்.**

எம்மவர் தெருவோரக் குடிசை கட்ட
தேடிவந்து கிடுகுகொடுக்கும் தென்னைகளும்
வளங்குறைந்த தமிழன் வாழ்வுக்காய்
வாடைக்காற்றுடன் வாதாடும் வாழைகளும்
வஞ்சகியின் வயிற்றில் அடிக்கும் சூழ்ச்சியால்
தமிழன் வாடிவிடாது காக்க வாழ்வளிக்கும்
வயல்களும்
எம்மவருடன் கூடிநின்று கூறினவாம்
எம் நாடும் தமிழீழம் என்றே.

**–க. ரவி, இத்தாலி.**

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **23- 01 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# சுதந்திர வாசல்வரை....

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:
**'Kalathil',**
**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

அகதியாய் ஆகி புலம்பெயர் வாழ்வுள்
இடர்பல கொண்டாலும் – பெரு
மனிதனாய் வந்து புகழ்ப்பெயர் மகுடம்
தாங்கியே ஆண்டாலும்
தனியனாய் மாறி சுயநலப் பூச்சியாய்
தாய்மறந், துயர்ந்தாலும் – உன்
தாயகந், தன்னை 'தமிழீழம் என்றே'
சாற்றிடத் தயங்காதே தமிழா!

**–பரதன், லண்டன்.**

## ஆக்கங்கள் அனுப்பியோர்

**ஆக்கங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றி:**

பிரான்ஸ்– விக்னேஸ்வர், நவாலியூர்
ப. செல்வநாதன்.
யேர்மனி– எவ். பிரேமானந்தன்,
தி. ஜெயராசன்.
இத்தாலி– காரை ந. சேகர்.
சுவீடன்– பகீரதன் அர்ஷன்.
தமிழ்நாடு–தமிழன்
வல்வைக்கித்துள்

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினெட்டு

(தொடர்ச்சி)

லியோன் யூரிஸ்

முன்பு இது ஒரு சிறிய பராமரிப்புப் பிரிவினால் (Service Unit) பாவிக்கப் பட்டிருக்க வேண்டும். வேலி இன்னும் பத்திரமாக இருந்தது. வேறு இரு காரியாலயக் கட்டிடங்களும், உப கட்டிடங்களும் இருந்தன. பிரதான மின்சாரக்கம்பிகளில் இருந்து இன்னும் மின் இணைப்பு இம்முகாமுக்கு இருந்தது.

அன்றிரவும், தொடர்ந்த இரு இரவுகளிலும் கரா ஒலொஸ்ஸில் இருந்து வந்த பால்மாக்குகள் துரித கதியில் அம்முகாமைத் துப்பரவு பண்ணியும், கூடாரங்களை அமைத்தும், இந்த முகாம் திரும்பவும் சேவையில் உள்ளது போல் தோற்றமளிக்கச் செய்தார்கள். பன்னிரெண்டு ட்ரக்குகளும், இரண்டு ஜீப்புகளும், பிரிட்டிஷ் இராணுவத்தின் காக்கி நிற வர்ணம் பூசப்பட்டன. இவைகளின் கதவுகளின் மேல் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரிட்டிஷ் இராணுவப் பிரிவுகளின் சின்னங்களில் ஏதாவதொன்றென எண்ணக் கூடியதான ஒரு சின்னத்தையும் "23 வது போக்குவரத்துப் பிரிவு - எச். எம். ஜே. எப். சி." (23rd Transpotanon Company h. m. j. f. c. ) என்ற எழுத்துக்களையும் ஜோஆப் யார்க்கோனி பொறித்து விட்டான்.

இந்தப் "பிரிவின் காரியாலயத்தில் உண்மையான போலியான பிரிட்டிஷ் கட்டளைகளையும், ஆவணங்களையும் நிறையவே கொண்டிருந்ததானது அதற்கு ஒரு உண்மையானது போன்ற தோற்றத்தை அளித்தது.

நாலு நாட்களில் இந்தப் பன்னிரண்டு ட்ரக்குகளுடனான சிறிய முகாம் இயற்கையானதாகவும், வித்தியாசமான கவனத்தை ஈர்க்காததாகவும் மாறி விட்டிருந்தது. தேவையான அளவு

**இழப்பதற்கு எதுவுமில்லை...! இருப்பதற்கு இனிய நாடு ஒன்று போதும் என்ற உணர்வோடு ஒரு கையில் துப்பாக்கி! மறுகையில் மண்வெட்டி! ஊனின்றி, உறக்கமின்றி, வியர்வையையும், இரத்தத்தையும் விலையாகக் கொடுத்து விலைமதிப்பில்லாத் தங்கள் தாயகத்தை மீட்டெடுக்கின்றார்கள் யூதமக்கள்...**

பால்மாக்குகளை பிரிட்டிஷ் சிப்பாய்கள் போல் உடையணிவிக்கத் தோவையான சீருடைகளையும் மற்றும் முகாமுக்கும் தேவையான வேறு பொருட்களையும் நிறையவே அந்தக் களஞ்சியத்தில் இருந்து கொண்டு வந்திருந்தார்கள்.

இறுதியாக முகாமின் வாசலுக்கு மேல் ஜோஆப் யார்க்கோனி "23-வது போக்குவரத்துப் பிரிவு, எச். எம். ஜே. எப். சி." என எழுதப்பட்ட பெயர்ப் பலகையைத் தொங்க விட்டான். இந்தப் பெயர்ப்பலகையை உயர்த்தும் போது, உத்தியோக பூர்வ ரீதியாகவே இம்முகாமைச் சேவைக்கு அர்ப்பணிப்புச் செய்வது போல் எல்லோரும் ஆறுதல் பெருமூச்சு விட்டனர்.


செவ் பெயர்ப்பலகையைப் பார்த்து விட்டுத் தலையைச் சொறிந்து கொண்டான். "எச். எம். ஜே. எப். சி. என்பது எதனைக் குறிக்கிறது?"

"மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் சைபிரசுக்கான யூத படைப்பிரிவு என்பதைத்தான்....... வேறென்ன" (His Majesty's Jewish Forces on Cyprus) என்றான் ஜோஆப்.

கிடியோன் திட்டத்திற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டு விட்டன. பிரிட்டிஷ் எல்லை மீறிய துணிச்சலை அரி பென் கானான் பெற்றிருந்தான். பிரிட்டிஷ் இராணுவ சீருடை ஒன்றை அணிந்து கொண்டு, பாமாகுஸ்ரா வீதியில் பகிரங்கமாக மொசாட் அலியாபெற்றின் தலைமைக் காரியாலயம் ஒன்றை நிறுவித் தனது திட்டத்தின் இறுதிக் கட்டத்தைப் பிரிட்டிஷ் உபகரணங்களைக் கொண்டே நிறைவேற்றப் போகிறான். இது ஒரு ஆபத்தான விளையாட்டுத்தான். ஆனால் ஒரு மறைமுகமாக இயங்கும் ஒற்றனுக்கு அவன் இயற்கையான முறையில் இயங்குவதே மிகப் பாதுகாப்பளிக்கும் முறையாகும் என்ற கொள்கையை அவன் கொண்டிருந்தான்.

கிடியோன் திட்டத்தின் அடுத்த பகுதி, பாமாகுஸ்ராவுக்கு வந்த வர்த்தகக் கப்பலொன்றில் இருந்து தரையிறங்கிய மூன்று அமெரிக்கர்கள் திரும்பவும் கப்பலுக்குச் செல்லாமலே விட்டபோது நிறைவேறிற்று. இவர்கள் மூவரும் போரின் போது, அமெரிக்கக் கடற்படையில் பயிற்சி பெற்றிருந்த, மொசாட் அலியா பெற் உறுப்பினர்கள் ஆவர். வேறொரு கப்பலிலிருந்து பிராங்கோ ஸ்பானியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இருவர் வந்து சேர்ந்தனர். முன்பும் அடிக்கடி முந்திய ஸ்பானிய இராஜவிசுவாசிகள் (Loyalists) அலியா பெற் கப்பல்களில் சேவையாற்றியிருந்தனர். இப்போ எக்ஸோடசுக்கான மாலுமிகள் குழு ஒன்று சேர்க்கப்பட்டு விட்டது. மிகுதி இடங்கள் அரி, டேவிட், ஜோஆப், செவ் ஆகியோரால் நிரப்பப்படும்.

ஹாங் சுலெஸ் பேர்க் (Hank Schlosberg) என்ற அமெரிக்கக் கப்பல் தலைமையிலும் ஜோஆப்பமாக எக்ஸோடஸ் ஐ ஒரு குடியகல்வுக் கப்பலாக மாற்றும் முயற்சிகளை மேற்கொண்டனர். லார்நாகா ஒரு சிறிய துறைமுகமாக இருந்தாலும் இறங்கு துறை முடிவில் அப்ரோடைட்டில் நிகழ்ந்து கொண்டிருந்த வழமைக்கு மாறான நடவடிக்கைகளைப்பற்றி, எவ்வித பரபரப்பும் ஏற்படாமல் தேவையானவர்களை மௌனிக்கச் செய்யும் வழிமுறைகளை மாண்ட்றியா அறிந்திருந்தான்.




முதலில் தளங்கள், அறைகள், சேமிப்பிடங்கள் போன்றவற்றில் இருந்து அலுமாரிகள், பெட்டிகள், தட்டுகள், மேசை, கதிரை போன்றவைகள், வேறு மேலதிக இணைப்புகள் எல்லாம் அகற்றப்பட்டு, ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை ஒரே வெளியான இடமாகச் செய்யப்பட்டது.

ஆண்பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் வேறு வேறான இரு மலசல கூடங்கள் மேல்தளத்தில் மரத்தாலமைக்கப்பட்டன. மாலுமிகளுடைய சாப்பாட்டு அறை, ஆஸ்பத்திரியாக மாற்றப்பட்டது. சம்பிரதாய பூர்வமான உணவருந்தும் அறையோ, சாமான்கள் வைக்கும் அறையோ இருக்க மாட்டாது, எல்லா நேரமும் தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகளே உண்ணப்படும். மாலுமிகள் சாமான் வைக்குமிடம் களஞ்சியமாகவும் ஆயுத அறையாகவும் மாற்றப்பட்டது. மாலுமிகள் இருப்பிடம் நீக்கப்பட்டது. அவர்கள் இரண்டாவது கட்டுப்பாட்டுத் ( Small Bridge ) தளத்தில் தூங்குவார்கள். ஒலிபெருக்கி அமைப்பு நிறுவப்பட்டது. கப்பலின் பழைய இயந்திரமும் மிக நுணுக்கமாக மறுசீரமைக்கப்பட்டது. இயந்திரமும் பழுதடைந்து போனதால் பாவிப்பதற்காக அவசரகால பாய்மரமும், பாயும் தயாரிக்கப்பட்டு இணைக்கப்பட்டன.

முந்நூறு பிள்ளைகள் இடையே பழமை பேணும் மரபுப் பிள்ளைகளும் இருந்தமை, குறிப்பிடத்தக்க பிரச்சினைகளை ஏற்படுத்தியது. யார்க்கோனி சைப்பிரசின் யூத சமூகத் தலைவர்களோடு தொடர்பு கொண்டு, யூத மதச் சடங்குகளோடு, யூத மத உணவுச் சட்டங்களுக்கமையத் தயாரிக்கப்பட்ட புலால் உணவு வகைகளை ( Kosher Food ) விசேடமாகத் தயாரித்து தகரத்திலடைக்க ஏற்பாடு செய்தான்.

கீழ்த்தளத்தின் சரியான கன அளவும் மேல் தளத்தின் பரப்பளவும் அளந்து எடுக்கப்பட்டன. கீழ்த்தளத்தில் 17 அங்குல அகலமான அடுக்குக் கட்டில்கள் அமைக்கப்பட்டன. இவை புரண்டு படுக்க வசதியில்லாமல் முதுகுப்புறமாகவோ, குப்புறவோ படுத்துக்கிடக்க மட்டும் இடமளிக்கும் வண்ணம் நிறுவப்பட்டன. அவர்கள் பிள்ளைகளின் உயரங்களை அளந்து, சராசரி உயரமாக 4 அடி 11 அங்குலமாகக் கணித்து, உறங்கும் இடங்களையும், தந்த அளவிற்கே ஒவ்வொரு பிள்ளைக்கும் குறித்து ஒதுக்கீடு செய்தார்கள். மிகுதி கீழ் தளத்திலும், மேல்தளத்திலும் எஞ்சியிருந்த இடங்களும், இவ்வண்ணமே பிரிக்கப்பட்டு, பிள்ளையொன்று நித்திரையில் எத்திசையிலும் ஓரிரு அங்குலங்களுக்கு மேல் அசைய இடமில்லாத முறையில் குறித்தொதுக்கப்பட்டது.

உயிர்காப்புப் படகுகளும் திருத்தப்பட்டன. கப்பலின் பக்க பகுதிகளில் பெரிய துவாரங்கள் இடப்பட்டு அவைகளில் கீழ்த்தளத்துள் காற்று வீசக்கூடிய வகையில் மின்விசிறிகளுடன் கூடிய காற்றுக் குழாய்கள் அமைக்கப்பட்டது. பிரிட்டிஷ் களஞ்சியத்திலிருந்து எடுக்கப்பட்ட காற்று வெப்பம் சீராக்கும் இயந்திரமும் ( Ari Conditioning Unit) இணைக்கப்பட்டது. நெருக்கமான இடத்தில் பெரும் தொகையில் பிள்ளைகள் வாந்தி எடுப்பதைத் தடுக்க, காற்று சீரான முறையில் செலுத்தப்பட வேண்டியது அவசியமான இருந்தது.

இந்த வேலை மிகவும் சுமுகமாக நடந்து கொண்டிருந்தது. மீட்புக் கப்பலொன்றில் ஒரு டசின் வரையான வேலையாட்கள் வேலை செய்து கொண்டிருப்பது, லார்நாகாவில் ஒரு மிக இயற்கையான நிகழ்வாகவே தேற்றமளித்தது.

பயணத்துக்குத் தேவையான பொருட்களைக் கப்பலில் ஏற்றுவது ஒரு பிரச்சினையை உருவாக்கியது. அதிக கவனத்தை ஈர்க்கும் என்பதால் காக்கி வர்ணத்தில் இருந்த ட்ரக்குகளை துறைமுகத்துக்குள் அனுப்ப அரி பயந்தான். மீள் நிர்மாணம் பெரிதும் பூர்த்தியான நிலையில் எக்ஸோடசானது, ஒவ்வொரு இரவும் களவாக லார்நாகாவில் இருந்து வெளியேறி சில மைல்கள் தூரத்தில் தென்குடாப் பகுதியில் இருந்த ஒதுக்குப்புறமாகச் சிறிய குடாவொன்றுக்கு சென்றது. இங்கு "23வது போக்குவரத்துப்பிரிவு எச். எம். ஜே, எப். சி. யின் ட்ரக்குகள், பிரிட்டிஷ் களஞ்சியத்தில் இருந்து எடுக்கப்பட்ட பொருட்களுடன் வந்து சேரும். எக்ஸோடஸ் அங்குலம் அங்குலமாக நிரப்பப்படும் வரை, முழு இரவும் இரப்பர் கப்பல் படகுகள் கரைக்கும் கப்பலுக்குமாகச் சென்று வந்தன.

கராஒலொஸ் முகாமின் பிள்ளைகள் பிரிவில் செவ் ஜில்போவா கிடியோன் திட்டத்தின் தன் பங்கைச் செவ்வனே நிறைவேற்றி வந்தான்.

தொடரும்...

# பூ ஒன்றின் மலர்வுக்காய்....

அன்று,
தனித்துப்பாக்கியோடு.....
இவர்களைத் தேடித்..... தேடி....
பச்சை உடைதரித்த படைகள் வரும்!
இன்று,
வான், கடல் கலங்களை காத்திருக்கும்
வீர மகளிர்தம் கனல்விழிகள்!
தாங்கிப்படை, ஆட்லறி, மோட்டார்-
பெரும் நகர்வெடுத்து-
வியூகம் அமைத்து நிற்கும்-
கஜ, ரத, துரக, பதாதிகளைத் தேடி-
தமிழர் சேனை!
ஆக்கிரமிப்பாளன் வசமுள்ள
'நவீன ரகம்' அத்தனையும்
இந்த வீரர்தம் கைக்குவரும்.
அத்தனைக்கும்,
இவர்களது மதிப்பறியா
முதலீடு-
இடைவிடாது முழக்கமிடும் எறிகணைகள்,
சோவென இரைந்து பெய்யும் ரவை மழை,
பூமி இடித்துச் செல்லவரும் டாங்கி அலை,
-ஒரு பூகம்பத்துக்குள்ளே இரும்பாய்
மன உறுதி.
எந்தத் தியாகத்திற்கும் துணிந்த உள்ளம்.
ஓய்வுக்கு ஏவாச் செயலாற்றல்.

மானம் பெரிதென பின் தொடரும்
மக்கள் இனம்,
பூ ஒன்றின் மலர்வுக்காய்.....
பிரளயத்தை தாங்கி நின்று
புனித யாகம் செய்யும்!

**-வதனிலா**








T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Kornquader Weg - 12
7007 Chur, Switzerland
Tel: 081-252-91-29

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 580 8224